Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ

MADRAS CEMENTS LTD


RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து

(C/1283)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 மாசி 14 ஞாயிற்றுக்கிழமை (26.02.2012) பக்கங்கள் 16 ஓசை – 148













# தகுதி அடிப்படையிலான நிலையை அங்கத்துவ நாடுகள் எடுக்கவேண்டும்

## அமெரிக்க தீர்மானம் குறித்து அரசு கோரிக்கை



(ஜெனிவா)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் முன்வைக்கப்படவுள்ள தீர்மானம் தொடர்பாக அங்கத்துவ நாடுகள் தகுதி அடிப்படையில் தமது நிலைப்பாட்டை மேற்கொள்ள வேண்டுமென அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ள அதேநேரம், தீர்மானம் நிறைவேற்றும் திட்டத்தை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் வரை ஒத்திவைக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அணிசேரா இயக்கம், இஸ்லாமிய நாடுகள் அமைப்பு ஆகியவற்றைச் சார்ந்த நாடுகள் உட்பட 25 நாடுகளின் தூதுக்குழு வினருடன் இரு தரப்பு கலந்துரையாடல்களில் எனது தலைமையிலான இலங்கைத் தூதுக்குழுவினர் ஈடுபட்டனர்.

இந்நாடுகள் இவ்விடயத்தில் தீர்மானம் மேற்கொள்ளும்போது அவை வெவ்வேறு உலகளாவிய குழுக்களை சார்ந்திருப்பதை கருத்திற் கொள்ளக்கூடாது அவ் வாறு இல் லா விட்டால் அது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் பெறுமானங்களை குறைத்து மதிப்பிடுவதாக அமைந்துவிடும்.

அமெரிக்க அனுசரணையுடனான தீர்மானம் குறித்து தயக்கங்களைக் கொண்டுள்ள பல நாடுகள் சில வலுவான குழுககளில் அவை அங்கம் வகிப்பதன் காரணமாக வித்தியாசமான நிலைப்பாட்டை மேற்கொண்டுள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 19 ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றும் திட்டத்தை ஒக்ரோபர் மாதம் வரை கால அவகாசம் (15 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனிவா தீர்மானம் அரசிற்கு எதிரானதே நாட்டிற்கு அல்ல என்கிறது ஐ.தே.க.

ஜெனிவா மனிதவுரிமைகள் ஆணைக குழுவில் சமர்ப்பிக்கப்படுவது தற்போதைய அரசாங்கத்திற்கு எதிரான பிரேரணையே அன்றி, இலங்கைக்கு எதிரான பிரேரணை அல்லவென ஐக்கிய தேசியக் கட்சி புதிய வியாக்கியானம் செய்துள்ளது.

கண்டி அக்குன பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல இந்த விடயத்தைக் குறிப்பிட்டார். யுத்தம் ஆரமபித்த காலப் பகுதியில் இருந்து இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து இங்கு பிரேரணை தாக்கல் செய்யப்படவில்லை.

2005 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு இறுதியுத்தம் நடந்த காலப் பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்தே மனிதவுரிமைகள் ஆணைக்குழு (15 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கு எதிரான தீர்மானம் தூர விலகிய நவநீதம்பிள்ளை

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 19 ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள தீர்மானம் தொடர்பில், தன்னால் எதுவும் செய்ய முடியாது என ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைப் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையை நேற்று முன்தினம் ஜெனிவாவில் வைத்து வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தலைமையிலான குழுவினர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபோதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இச்சந்திப்பின் போது, ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள அமெரிக்காவின் தீர்மானம் குறித்து வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பிரிஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இவ்விகாரத்தில் தன்னால் செய்வதற்கு ஒன்றும் இல்லை என்றும், இவ்விடயத்தில் இருந்து தான் தூரத்திலேயே இருப்பதாகவும் இதற்குப் பதிலளித்த நவநீதம்பிள்ளை கூறியுள்ளார். (15 ஆம் பக்கம் பார்க்க)

# நல்லூர் பிரதேச சபையை கலைப்பதற்கு முயற்சி

## தவிசாளர் குற்றச்சாட்டு

(திருநெல்வேலி)

நல்லூர் பிரதேச சபையைக் கலைப்பதற்குச் சிலர் முயற்சி செய்வதாகத் தலைவர் ப.வசந்த குமார் குற்றம் சாட்டியுள்ளார்.

நிர்வாகச் சீர்கேடு எனக் காரணம் காட்டி இத்தகாத செயலை மேற்கொள்வதற்குச் சிலர் முனைபபுக்காட்டி வருவதாக அவர் வருத்தம் தெரிவித்தார். தமது தலைமையின் கீழ் சபையின் நிர்வாகம் சிறப்பாக நடைபெற்றுவ்வருவது சிலருக்கு மன எரிச்சலைக் கொடுத்திருக்கிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கிடையே, தலைவருக்கும், செயலாளருக்குமிடையில் நிர்வாக அதிகாரங்கள் சம்பந்தமாக முரண்பாடுகள் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தமது அதிகாரங்கள் மீறப்படு வதைத் தான் விரும்பவில்லை என செயலாளர் கவலை தெரிவித்தார்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை பிரதிநிதிகள் குழுவின் மற்றொரு தொகுதி ஜெனிவாவிற்கு

ஜெனிவாவில் நாளை ஆரம்பமாகும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை கூட்டத்தொடரில் கலந்துகொள்வதற்காக இலங்கை தூதுக்குழுவின் மற்றுமொரு குழுவினர் நேற்று அதிகாலை ஜெனிவா பயணமாகினார். இக்குழுவில் அமைச்சர்களான அநுர பிரியதர்ஷன யாப்பா, சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார பிரதி அமைச்சர் எம்.எல்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் துரையப்பா நவரத்தினராஜா மற்றும் ஜனாதிபதியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.கனகரத்தினம் (15 ஆம் பக்கம் பார்க்க)

# சரணடைய வந்தோரைக் காக்க அரசு அனுமதி வழங்கவில்லை

## என்கிறார் விஜய் நம்பியார்

(ஜெனிவா)

இலங்கை அரசு அனுமதி வழங்காத காரணத்தால் சரணடைய முன் வந்தோரைக் காப்பாற்ற முயடிவில்லையென ஐ.நா. பொதுச் செயலரின் விசேட பிரதிநிதி விஜய் நம்பியார் தெரிவித்துள்ளார்.

வெள்ளைக்கொடி விவகாரம் குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சிரியாவில் அண்மையில் கொல்லப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் மேரி கொல்வின் நடு இரவில் என்னைத் தொடர்பு கொண்டு புலிகள் சரணடைய விரும்புவதாகத் தெரிவித்தார். புலிகளின் கோரிக்கை தொடர்பில் அமெரிக்க தூதுவரிடம் இரண்டு தடவைகள் தகவல்களை வழங்கினேன். அரசாங்கம் அனுமதி வழங்காத காரணத்தினால், சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினால் கடல் வழியாகச் சென்று சரணடைவோரைக் காப்பாற்ற முடியவில்லை. குறித்த பிரதேசத்திற்கு செல்வதற்கு முயற்சி எடுக்கப் பட்டது. இருவர் தொடர்பு (15 ஆம் பக்கம் பார்க்க)



# வெளிநாட்டு தலையீட்டிற்கு எதிராக நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டம்

அமெரிக்காவுடன் சில ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகள் இணைந்து ஜெனிவா மனித உரிமை மாநாட்டில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கவுள்ள தீர்மானத்தை எதிர்த்தும், வெளிநாடுகளின் தேவையற்ற தலையீடுகளைக் கண்டித்தும், நாளைமுதல் நாடு தழுவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. இது குறித்து பதில் ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன மேலும் தெரிவிக்கையில், (15 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை

ஐ.நா. மனிதவுரிமை பேரவையில் இலங்கை தொடர்பாக இதுவரை எந்வொரு உத்தியோகபூர்வ அறிக்கையும் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் இந்தக் கூட்டத்தில் பிரிவினைவாதிகளுக்கு அரசாங்கம் இடமளிக்கப் போவதில்லை என்றும் ஜெனிவா சென்றுள்ள மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

நாளை ஆரம்பமாகவுள்ள கூட்டத்தொடரின் போது இலங்கையின் நிலைப்பாடு தொடர்பாக விளக்மளிக்கவுள்ளதாகவும் அமைச்சர் கூறியுள்ளார். இதேவேளை, அரசாங்கம் நிலையான திட்டமொன்றிற்கு அமைய செயற்பட்டுவரும் நிலையில், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துமாறு மனித உரிமைகள் பேரவையில் பிரேரணை சமர்ப்பிக்கப்படுவது எந்த வகையிலும் உகந்ததல்லவென அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக பல்வேறு நாடுளையும் தெளிவுபடுத எண்ணியுள்ளதாகவும் இலங்கை குழுவின் தலைவர என்ற வகையில் கூட்டத்தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் சில தூதுவர்களைச் சந்தித்து நாட்டின் நிலைமை தொடர்பில் விளக்கமளிக்கவுள்ளதாகவும் அமைச்சர் மகிந்த சமரசிங்க மேலும் (15 ஆம் பக்கம் பார்க்க)

# பாதிக்கப்பட்ட மக்களை நோக்கி மனித உரிமைப் பணி வேண்டும்

## பயிற்சி முடித்தவர்கள் மத்தியில் இணைப்பாளர் வேண்டுகோள்




(யாழ்ப்பாணம்)

உள்நாட்டில் இடம்பெயர்வின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கான தீர்வை நோக்கியதாக உங்களது பணி அமையவேண்டும் என்று மனித உரிமைப் பாதுகாவலர்களுக்கான பயிற்சிநெறியைப் பூர்த்திசெய்து அதற்கான சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்ட மனித உரிமைப் பாதுகாவலர்கள் மத்தியில் உயரைாற்றிய இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ். இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

நேற்று மு.ப. 10.00 மணிக்கு இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் மனித உரிமைப் பாதுகாவலர்களுக்கான பயிற்சியை நிறைவு செய்த 43 பேருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு மற்றும் கடந்த மனித உரிமை தினத்தில் நடத்தப்பட்ட பதாகைப் போட்டியில் தேசிய ரீதியிலும் மாவட்ட ரீதியிலும் சான்றிதழ் பெறுபவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு தலைமையேற்று உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இன்றுமுதல் மனித உரிமைப் பாதுகாவலர்களாக நீங்கள் செயற்படவிருக்கிறீர்கள். 10 ஆண்டுகாலமாக இயங்கிவந்திருக்கும் மனித உரிமை ஆணைக் குழுவின் அங்கமாக உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கான செயற்திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டிருந்தது.

அது தற்சமயம் நல்ல பலனைத் தந்துள்ளது. இந்த செயற்திட்டம் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக முன்னெடுக்கப்பட்டது. அதன் நோக்கத்தை மனித உரிமை ஆணைக்குழு அடைந்திருக்கிறது. அதன்மூலமாக பல வெற்றிகளையும் கண்டுகொண்டுள்ளது எனவும் கனகராஜ் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். காரியாலயத்தைச் சேர்ந்த கே.கார்த்திகா, கமலேஸ்வரன் மற்றும் யாழ். மனித உரிமை ஆணைக்குழு காரியாலய உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர். (பா)

# அரச உத்தியோகத்தர்களுக்கு சிங்கள மொழி வகுப்பு ஆரம்பம்

(வடமராட்சி)

அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி நிறுவனத்தினால் நடத்தப்படும் வடமராட்சியில் உள்ள அரச திணைக்கள உத்தியோகத்தர்களுக்குச் சிங்கள மொழிப் பயிற்சி வடமராட்சி மத்திய மகா வித்தியாலயத்திலும், பருத்தித்துறை வேலாயும் மகா வித்தியாலயத்திலும் சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களில் தரம் 1, தரம் 2, தரம் 3 ஆகிய மட்டத்தில் பிரிக்கப்பட்டு தரம் 3 இற்கான வகுப்புகள் நேற்று ஆரம்பமாகியுள்ளது.

இவ்வகுப்பின் வளவாளராக எஸ்.ராசநாயகம், திருமதி எஸ்.சரஸ்வதி, திருமதி ரி.தாரணி ஆகியோர் கலந்துகொண்டு கற்பிக்கின்றனர்.

தரம் 3 இற்கான வகுப்பு 6 மாதங்கள் கொண்டதாகும். தரம் 2 இற்கான வகுப்பு ஒரு வருடம் கொண்டதாகும். தரம் 1 இற்கான வகுப்புக்கு ஆசிரியர் இல்லாதமையினால் பின்னர் அறிவிக்கப் படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

சிங்கள மொழி கற்பதற்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் 85 அரச உத்தியோகத்தர்களும், பருத்தித்துறை வேலாயும் மகா வித்தியாலயத்தில் 40 அரச உத்தியோகத்தர்களும் இணைந்துள்ளனர். வடமராட்சி கிழக்கு பிரதேச அரச உத்தியோகத்தர்கள் பருத்தித்துறை வேலாயும் மகா வித்தியாலயத்திலும் பயிலமுடியுமென ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். (116)

# 2012 பேர் கூடி தேவார பாராயணம்

(வடமராட்சி)

முதன்முறையாக வடமராட்சியில் 2012 பேர் இணைந்து வழங்கும் தேவார பாரா்யணம் எதிர்வரும் 3 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.00 மணி முதல் 5.30 மணிவரை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜியின் பிரதான சீடர் சுவாமி சத்யோஜாதாவின் ஆன்மீக சொற்பொழிவு, ஆசீர்வாதம் மற்றும் தியானம் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (116)

# சனசமூக நிலையத்திற்கான புதிய கட்டடத் திறப்பு விழா

மேலைப்புலோலி தம்பசிட்டி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய புதிய கட்டடத் திறப்பு விழா இன்று காலை இடம்பெறவுள்ளது.

நிலையத் தலைவர் கி.குகநாதன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை நகரசபைத் தலைவர் சபா.இரவீந்திரன், பருத்தித்துறை பிரதேச செயலர் த.ஜெயசீலன், வடமராட்சி தென்மேற்கு பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், யாழ். பல்கலைக்கழக முகா்மைத்துவ பீடாதிபதி பேராசிரியர் பா.நடராஜசுந்தரம் மற்றும் முன்னாள் பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் அ.அ.நடராசா, கௌரவ விருந்தினராக ஓய்வு பெற்ற தபால் அத்தியட்சகர் அ.துரைசிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (109)

# கால்நடைப் பண்ணைகளை பதிவு செய்யுமாறு அறிவுறுத்து

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் கால்நடைப் பண்ணைப் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரிகள் பணிமனை கால்நடை வைத்தியர் யூலியானா கேட்டுக்கொண்டுள்ளார்.

பதிவுகளை மேற்கொள்ள வரும்போது அந்தந்தப் பகுதி கிராம அலுவலர் மற்றும் கமக்காரர் அமைப்புகளின் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழும் கொண்டு வர வேண்டும். கால்நடைகளான மாடுகளுக்கு காதில் இலக்கத் தகடு குத்துதல், ஏனைய கால்நடைகளுக்கு பதிவுகள் மாத்திரமே மேற்கொள்ளப்படும்.

பதிவுகள் யாவும் அந்தந்தப் பகுதி கிராம அலுவலர் பிரிவுகளூடாக கால்நடை உத்தியோகத்தர்கள் வருகைதரும்போது கால்நடை வளர்ப்போர் துரிதப்படுத்தி மேற்கொள்ளுமாறும் பதிவின் ஊடாக எதிர்காலத்தில் பண்ணை அபிவிருத்தித் திட்டங்களின் போது முதல்நன்மை ஏற்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாடுகளுக்கு காதில் இலக்கத்தகடு குத்தப்பட்டால் சட்டவிரோத கொலைகள், கொள்ளைகள் போன்றவற்றை இலகுவாக பிடிக்க முடியும் எனவும், ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றுவதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு இப்பதிவு பங்கு வகிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (116)





பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ, யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி மகிந்த ஹத்துருசிங்க மற்றும் இராணுவ அதிகாரிகளும், கடற்படை அதிகாரிகளும் நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை, கரம்பன் பகுதிகளுக்கான விஜயத்தினை மேற்கொண்டனர். இப்பகுதியில் சுயதொழில் ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற நண்டு வளர்ப்புத் திட்டத்தினை அவர்கள் பர்வையிட்டனர். இத்திட்டத்தின் கீழ் தற்போது 15 அங்கத்தவர்கள் வேலை வாய்ப்பினைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (85)

# நஞ்சருந்தி தற்கொலை

(யாழ்ப்பாணம்)

நோயின் கொடுமையால் நஞ்சருந்தி வயோதிபர் உயிரிழந்துள்ளார்.

இணுவில் தியேட்டர் வீதிப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 4.30 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த குஞ்சன் கிருஸ்ணன் (வயது - 66) என்ற வயோதிபரே நஞ்சருந்திய நிலையில் யாழ் போதனா வைத்தியசாலைக்கு அழைத்து வரும்போது உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எஸ்)

# ‘மலரும் மொட்டுக்களின் எதிர்கால ஏற்றம்’ கலை நிகழ்வுகளும் கௌரவிப்பும்

(சுன்னாகம்)

சுன்னாகம் தெற்கு கலைவாணி சனசமூக நிலையம் ‘மலரும் மொட்டுக்களின் எதிர்கால ஏற்றம்’ என்னும் கலை நிகழ்வு ஒன்றையும், மேற்படி நிலையத்துக்கு காணி அன்பளிப்பாக வழங்கிய கணபதி செல்லப்பாவை பொன்னாடை போர்த்தி கௌரவித்த நிகழ்வையும் கடந்த 20 ஆம் திகதி நிலைய முன்றலில் நடத்தியது.

திருமதி சிவாஜினி சுரேஸ்குமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு செல்லப்பாவை பொன்னாடை போர்த்தி கௌரவித்ததோடு சிறப்புரையும் ஆற்றினார்.

இந்நிகழ்வில் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம், வலி.தெற்கு பிரதேச சபையின் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள், மக்கள் கலை இலக்கிய அரங்க உறுப்பினர்கள், கிராமிய உழைப்பாளர் அபிவிருத்தி மையத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் ஊர் மக்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

இரவு நடைபெற்ற கலைநிகழ்வுகளில் மேற்படி நிலையத்தின் மாணவர்களும், இளைஞர்களும் பங்குபற்றிய 3 நாடகங்களும், நடனங்களும், கவிதை, பேச்சு, பல்சுவை நிகழ்ச்சிகளும் மேடையேற்றப்பட்டன.

இந்நிகழ்வுகள் பற்றியதான விமர்சன அரங்கு ஒன்றை கடந்த 23 ஆம் திகதி நிலைய முன்றலில் மக்கள் கலை இலக்கிய அரங்கத்தினர் முன்னெடுத்தனர்.

வ.ஜெகநாதன் தலைமையில் நடைபெற்ற இவ் அரங்கில் மக்கள் கலை இலக்கிய அரங்கு சார்பில் எஸ்.பாலசிங்கம், எஸ்.தங்கராஜா மற்றும் இணுவையூர் இலட்சுமிபுத்திரம் ஆகியோர் விமர்சன உரை நிகழ்த்தினர். (120)


## சிறு விளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வ்ாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1285)

### கணினி திருத்தம்
(Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம். அழகான கணினி மேசைகளும் விற்பனைக்கு உள்ளன. அழையுங்கள் 0779086737 (C/1305)


# விபத்தில் மாணவி காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டர் சைக்கிள் - துவிச்சக்கர வண்டியுடன் மோதியதில் பாடசாலை மாணவி படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் இளவாலைப் பகுதியில் பி.ப. 3.00 மணியளவில் இவ்விபத்துச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் கீரிமலை சிவன் கோவில் பகுதியைச் சேர்ந்த எஸ்.பவித்திரா (வயது - 18) என்ற மாணவியே படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

மற்றவர்களுடைய துன்பத்தைக் கண்டு இரக்கப்படு; ஆனால் உன்னுடைய சொந்த துன்பங்களை உன்னிடமே வைத்திரு!
- அகிடன் பிரபு -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## அயலவனோடு பிரச்சினைக்கு அனுகுண்டா?

நாளை சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில், 47 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐ.நா.மனித உரிமைப் பேரவையின் 19 ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ளது. இக்கூட்டம் மார்ச் மாதம் 23ம் திகதி வரை சுமார் 25 நாட்களுக்குத் தொடர்ந்து நடைபெறவிருக்கிறது.

பேரவையின் உறுப்பு நாடுகள் நாற்பத்தேழும் 5 பிராந்திய வலயங்களின் அடிப்படையில் சேர்க்கப்பட்டுள்ளன.

ஆபிரிக்க வலயத்தில் அங்கோலா, பெனின், பொட்ஸ்வானா, பேர்கினா ஃபசோ, கமரூன், கொங்கோ, டியுபோதி, லிபியா, மொரித்தானியா, மொரிசஸ், நைஜீரியா, செனகல், உகண்டா ஆகிய 13 நாடுகளும், தென் அமெரிக்க – கரீபியன் வலயத்தில் சிலி, கோஸ்ராறிக்கா, கியூபா, ஈக்குவட்டோர், கவுத்தமாலா, மெக்சிக்கோ, பெரு, உருகுவே ஆகிய 8 நாடுகளும், ஆசிய வலயத்தில் பங்களாதேஷ், சீனா, இந்தியா, இந்தோனேசியா, ஜோர்டான், குவைத், கஜகஸ்தான், மலேசியா, மாலைதீவு, பிலிப்பைன்ஸ், கட்டார், சவூதி அரேபியா, தாய்லாந்து ஆகிய 13 நாடுகளும், மேற்கு ஐரோப்பிய' அமெரிக்க நாடுகளின் வலயத்தில் ஒஸ்திரியா, பெல்ஜியம், இத்தாலி, நோர்வே, ஸ்பெயின், சுவிற்ஸர்லாந்து, அமெரிக்கா ஆகிய 7 நாடுகளும், கிழக்கு ஐரோப்பிய வலயத்தில் ரஷ்யா, ரூமேனியா, செக்கோஸ்சிலோவாக்கியா, போலந்து, மோல்டோவா ஆகிய 5 நாடுகளும் அங்கம் வகிக்கின்றன.

இந்த வருட கூட்டத்தொடரில், இலங்கைக்கெதிரான தீர்மானத்தை மேற்குறிப்பிட்ட நாடுகளில் ஒன்று முன்னெடுக்கும் எனவும், அதை அமெரிக்கா ஆதரிக்கப் போவதாகவும் ஏற்கனவே தெரிவித்துள்ளது. இலங்கை அரசின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த வலியுறுத்துவதே தீர்மானத்தின் நோக்கமாக இருக்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தீர்மானத்தால் இலங்கைக்கு உடனடிப் பிரச்சினைகள் எதுவும் இல்லையென்றாலும், கௌரவப் பிரச்சினைக்காகவும், காலப்போக்கில் பொருளாதார ரீதியான பாதிப்புகள் ஏற்படலாம் என்பதாலும், தீர்மானத்தை தோற்கடிக்க இலங்கை கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. மேலுள்ள உறுப்பு நாடுகளில், ஆசிய – ஆபிரிக்க – லத்தீன் அமெரிக்க வலயங்களைச் சேர்ந்த நாடுகளில் அதிகமானவை அமெரிக்கா மீது அதிருப்தி கொண்ட நாடுகள் என்பதால், அவை இலங்கைக்கு ஆதரவாகவே வாக்களிக்கக் கூடிய வாய்ப்புகள் அதிகம் உள்ளது என இலங்கை நம்புகிறது.

தமிழ்த் தரப்பைப் பொறுத்தவரையில், இதனால் நமது அதிகாரப் பகிர்வு, தீர்வு முயற்சிகளுக்கு எந்த லாபமும் ஏற்பட்டுவிடப் போவதில்லை என்பது தெரிந்தாலும், வெறுமனே இலங்கை அரசுக்கு நேரும் சங்கடங்களைப் பார்த்து உள்ளூரத் திருப்தியடையும் பாமர அரசியல் ஆர்ப்பாட்டக்காரர்களாகவே பெரும்பாலோர் நடந்துகொள்கின்றனர்.

அமெரிக்காவினதும் அதன் கூட்டு நாடுகளின் மூலமும் இலங்கை அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தி எமக்கான தீர்வைப் பெற்றுக்கொண்டு விடலாம் என்று தமிழ்மக்களை நம்பவைக்கும் நடவடிக்கைகளிலேயே நம்மவரின் ராஜதந்திரம் வந்துநிற்கிறது.

இது பெரும்பான்மைச் சிங்கள மக்கள் மத்தியில் அரசை மேலும் மேலும் வலுப்படுத்துவதே ஆகும் என்ற எளிய உண்மையையும் நாம் விளங்கிக் கொள்வதாயில்லை. இலங்கை மக்களை ஏகாதிபத்தியத்துக்கும் அதன் உள்ளூர் ஆதரவு சக்திகளுக்கும் எதிராக முன்னெப்போதும் இல்லாத வகையில் ஐக்கியப்படுத்துவதே இதன்மூலம் நடக்கிறது. இந்த நாட்டு மக்களை உள்ளூர்ப் பிரச்சினையிலிருந்து திசைதிருப்பி, ஏகாதிபத்தியங்களுக்கெதிரான தேச ஐக்கியம் என்பதைப் பிரதானப்படுத்துகிறது.

இது எந்த வகையில் நம் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு உதவப் போகிறது என்று இவர்கள் கருதுகிறார்கள்? இலங்கை அரசைவிட அமெரிக்காவை நம்பலாம் என்ற போக்கில் என்ன சாதிக்கப் போகிறோம் என்கிறார்கள்?

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் உலக அரங்கில் நடத்தி வரும் மனித குலத்துக்கு எதிரான செயற்பாடுகளை நாம் அறிய மாட்டோமா? கொரிய யுத்தம், இந்தோ சீன யுத்தம், ஈராக் ஆக்கிரமிப்பு, ஆப்கானிஸ்தான் ஆக்கிரமிப்பு, லிபியா ஆக்கிரமிப்பு, சிரியா – ஈரான் மீது பாய்வதற்கான இன்றைய ஆயத்தங்கள்... இதுவரை உலகம் முழுவதும் அழிக்கப்பட்ட மக்கள்தொகை எதுவுமே தெரியாதவர்களா நாங்கள்?

அயல் வீட்டானோடு பிரச்சினை என்றால் அனுகுண்டையா தூக்கிப் போடுவது?

- ஆசிரியர்

# யுத்த காலத்தில் இழந்த வாகனங்களை மீட்டெடுப்பதற்கு மீண்டும் சந்தர்ப்பம்

கடந்த 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதி போர் நடவடிக்கையின் போது மக்களால் கைவிட்டுச் செல்லப்பட்ட வாகனங்களை மீளப் பெறுவதற்கான சந்தர்ப்பம் மீண்டும் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளார்.

இதற்கமைய,யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வாகன உரிமையாளர்கள், வாகனங்களைக் கோருவதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

உரிய அத்தாட்சி ஆவணங்களுடனான தமது விண்ணப்பங்களை நேரடியாக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் கையளிக்கும் படியும் அரசாங்க அதிபர் கோரியுள்ளார்.

## பள்ளி மாணவன் பரிதாப மரணம்

(வவுனியா)

வவுனியா - நெளுக்குளம் பகுதியில் மாற்றுவலுவுள்ள மாணவன் ஒருவன் கிணற்றில் விழுந்து மரணமடைந்துள்ளார்.

வவுனியா வலுவூட்டல் வளாகத்தில் கல்வி கற்று வந்த பாலகுமாரன் தசரன் (வயது-18) என்ற மாணவன் ஆசிரியர்கள் கண்டித்தமையால் வளாகத்தில் இருந்து வீடு சென்றதும் தனது வீட்டுக்கு அருகாமையில் உள்ள வீடொன்றில் கிணற்றில் விழுந்து இறந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிணற்றில் விழுந்த மாணவனை மீட்பதற்கு அருகில் யாரும் அற்ற நிலையில் சில மணி நேரம் கிணற்றில் காணப்பட்ட மாணவனின் சடலம் பொது மக்களால் மீட்கப்பட்டு வவுனியா பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த மரணம் தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுள்ளதுடன் மரண விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றது. (125)

## உயிரிழந்தது யானை

ஹபரண பிரதேசத்தில் நேற்று முன்தினம் அதிகாலை ரயிலில் மோதி காட்டு யானை ஒன்று உயிரிழந்துள்ளது. கொழும்பு - கோட்டையில் இருந்து மட்டக் களப்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த நகர்சேர் கடுகதி ரயிலொன்றுடன் மோதி இந்த யானை உயிரிழந்துள்ளதாக ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் குறிப்பிட்டுள்ளது.

## யாழ். பண்ணை வீதி புனரமைப்பு; இரண்டாம் கட்டம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பண்ணை - ஊர்காவற்றுறை வீதியில் இரண்டாம் கட்டப் புனரமைப்புப் பணிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பண்ணைச் சந்தியில் இருந்து ஒருகிலோ மீற்றருக்கு வீதியின் இருபக்கமும் கொங்கிறீற் சுவர்கள் அமைக்கும் பணிகள் கடந்த வருட இறுதியில் முடிவடைந்தது. இதனைத் தொடர்ந்து அந்த வீதியின் இரண்டாம் கட்டப் புனரமைப்புப் பணிகள் கடந்த திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, இந்த வீதியின் ஆழமான கடற்பகுதியில் கொங்கிறீற் சுவர் அமைக்கும் பணிகளுக்கான கொங்கிறீற் தூண்கள் அரியும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

யாழ். கோட்டையின தெற்குப் புறமாக அமைக்கப்பட்டிருக்கும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வேலைத் தளத்தில் இந்த வீதிக்கான தூண்கள் அரியும் வேலையும் நடைபெற்று வருகிறது.

இந்த வீதியில் புனரமைப்புப் பணிகளின் போது யாழ்ப்பாணத்திற்கும் தீவுப் பகுதிகளுக்குமான போக்குவரத்துக்கள் மிகுந்த நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (பா)

# மீண்டும் உயர்வடைகிறது மசகு எண்ணெய் விலை

## இலங்கைக்கு அதிக பாதிப்பு

ஈரானிய கச்சா எண்ணெய் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள், பதிலுக்குச் சில ஐரோப்பிய நாடுகளுக்கு கச்சா எண்ணெய் ஏற்றுமதியை நிறுத்தி ஈரான் எடுத்துள்ள அதிரடி முடிவு ஆகியவை காரணமாக உலக சந்தையில் கச்சா எண்ணெய்யின் விலை நேற்று ஒரு பீப்பாய் 124 டொலராக உயர்ந்துள்ளது.

விரைவிலேயே இந்த விலை 150 டொலர்களாக உயர்வடையும் என்று அஞ்சப்படுகினறது.

இதுவரை கச்சா எண்ணெய் விலை மிகமிக அதிகபட்சமாக பீப்பாய் ஒன்றுக்கு 147 டொலரை எட்டியது. இது நடந்தது 2008 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில். இதன்பிறகு இப்போது மீண்டும் அதே நிலையை நோக்கிக் கச்சா எண்ணெய் விலை போய்க்கொண்டிருக்கிறது.

ஈரானின் இந்த அறிவிப்புக் காரணமாக இலங்கையில் பாரியளவு தாக்கம் ஏற்பட்டுள்ளது. இலங்கை 93 வீதமான கச்சா எண்ணெய் ஈரானில் இருந்து இறக்குமதி செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தமாதம் ஆரம்பத்தில் எரிபொருள்களின் விலையை அரசு உயர்த்தியிருந்தது. இந்த நிலையில் தொடர்ந்தும் கச்சா எண்ணெய்யின் விலை அதிகரிப்பு மேலும் இலங்கைக்குப் பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும் எனக்கூறப்படுகிறது.

# பண்டத்தரிப்பில் உள்ளூர் உற்பத்தி யு.என்.டி.பி.விசேட நிதியுதவி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் உப உணவு உற்பத்தி செயற்பாடுகளுக்கு யு.என்.டி.பி. உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் செயற்றிட்டத்தின் கீழ் 2 கோடியே 17 இலட்சம் ரூபாவினை அந்தச் சங்கத்துக்கு வழங்கவிருப்பதாக யாழ் கூட்டுறவு அபிவிருததி உதவி ஆணையாளர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேற்படி சங்கம் 2010 ஆம் ஆண்டு முதல் பனை சார் உப உணவு உற்பத்தியில் அதிகளவு கவனம செலுத்தி அந்த உற்பத்திப்பொருள்களை விற்பனை செய்து வருவதுடன், அரசின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மாவட்ட, மாகாண தேசிய மட்ட கண்காட்சிப போட்டிகளில் பங்கு பற்றி அதன்மூலம் பலரின் பாராட்டுதல்களையும் பெற்றது மட்டுமல்லாமல், இது தொடர்பாக நடைபெற்ற மாவட்ட அரச அதிபர்கள் மாநாட்டில் அவர்களது பாராட்டுதல்களையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இந்த நிலையில் அந்தச் சங்கத்தால் உப உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டதை அடுத்து யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதனின் நடவடிக்கையிலும் அவரது சிபார்சிலும் யூ.என்.டி.பி.நிறுவனம் இந்த நிதி உதவியை வழங்க முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கலாசாரப் பேரவைக்கு அங்கத்தவர்களை இணைத்தல்

வடமராட்சி வடக்கு கலாசாரப் பேரவையின் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் மிக விரைவில் இடம்பெறவுள்ளதால் வடமராட்சி வடக்கு பிரதேச கலைஞர்கள், கலையார்வலர்கள் அனைவரையும் 2012 இற்கான தமது அங்கத்துவத்தை 15.03.2012 இற்கு முன் பிரதேச செயலகத்தில் அங்கத்துவப் படிவத்தைப் பெற்று புதுப்பித்துக்கொள்ளுமாறு அல்லது புதிதாக இணைத்துக்கொள்ளுமாறு மேற்படி கலாசாரப் பேரவையின் தலைவர் கேட்டுக்கொள்கின்றார். (116)

# பிரதேச சபையில் பொறிதட்டும் விவாதம்; கட்டட அடிக்கல் நாட்டியதால் சர்ச்சை

(திருநெல்வேலி)

நல்லூர் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் கடந்த புதன்கிழமை நடைபெற்றபோது ஆளும கட்சி உறுப்பினர் ஒருவருக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் இடையே கடுமையான வாக்குவாதம் இடம்பெற்றது.

கொக்குவில் பொற்பதி பகுதியிலுள்ள சனசமூக நிலையக் கட்டடத்துக்கான அடிக்கல்லை எதிர்க்கட்சித் தலைவர் நாட்டியது சம்பந்தமாகவே இந்த வாக்குவாதங்கள் ஏற்பட்டன.

இக்கட்டடத்துக்கான அடிக்கல்லை நல்லூர் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் நாட்டுவதாக முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டு அவரது பெயர் குறிப்பிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களும் அடித்து வெளியிடப்பட்டிருந்தன. ஆனால் இச்சனசமூக நிலையம் சம்பந்தமாக இரண்டு பகுதியினரிடையே ஏற்பட்ட பிணக்குக் காரணமாக அடிக்கல்லை அன்று நாட்ட முடியவில்லை என காலையிலேயே தான சென்று அவர்களிடம் கூறியதாகவும், இரண்டு பகுதியினரையும் அழைத்து கலந்துரையாடிய பின்னர் இதனை மேற்கொள்ளலாம் எனத் தெரிவித்ததாகவும் பிரதேச சபைத் தலைவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் அழைக்கப்பட்டு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர் அடிக்கல் நாட்டியது பிழையான செயல என ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டபோது அவருக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்குமிடையே காரசாரமான விவாதம் இடம்பெற்றது.

கோப்பாய் பொலிஸாரிடம் இக்கட்டடம் பிரதேச சபையின் அனுமதி பெறாமல் கட்டப்படுவதாக தவிசாளர் முறைப்பாடு செய்ததாக எதிர்க்கட்சித் தலைவர் குற்றஞ்சாட்டினார்.

தவிசாளரின் பெயர் குறிப்பிடப்பட்டு துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்ட பின்னர் அவர் அடிக்கல் நாட்டாமல் விட்டது தவறு என எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார். இது பற்றி சபைக்கு அவர் தெரிவிக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 7ஆம் திகதி இந்த அடிக்கல் நாட்டப்படுவதாக துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. (137)

# சாலைகளில் புகைமண்டலம் பயணிகள் பெரும் அவதி


(புதுக்குடியிருப்பு)


வன்னிப் பிரதேசத்தில் சாலைகள் புனரமைக்கப்படுவதன் காரணமாக அதில் இருந்து எழும் தூசு மற்றும் புகைமண்டலத்தால் அச்சாலைகளில் பயணம் செய்பவர்கள் பல அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர்.

சாலைகளில் வேகமாகப் பயணிக்கும் வாகனங்களால் அதில் இருந்து எழும் புழுதிகள் மற்றும் தூசுகளால் சாலைகளில் பயணிப்பவர்கள் மூக்கை துணிகளால் மூடிக்கட்டிய நிலையில் பயணம் செய்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

குறிப்பாக பரந்தனில் இருந்து புதுக்குடியிருப்பு வரையான சாலையின் பெரும்பகுதி புனரமைக்கப்பட்ட நிலையில், அதில் இருந்து எழும் செம்மண் புழுதிகளாலும், தூசுகளாலும் பள்ளி மாணவர்கள், பேருந்துகளில் பயணம் செய்பவர்கள் பல அசௌரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதேவேளை, சாலையில் புனரமைக்கப்பட்ட பகுதிகளில் காபற் இடும் பணி எப்போது ஆரம்பிக்கப்படுமென மக்கள் அங்கலாய்ப்பதையும் காணக்கூடியதாக உள்ளது. (138)





யாழ்ப்பாணம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் நடத்திய ஓய்வுபெற்ற உறுப்பினர்கள், பணியாளர்கள் கௌரவிப்பு விழாவில் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.பாலச்சந்திரன் உறுப்பினர் ஒருவருக்கும், சமாசத் தலைவர் நா.கணேசு பணியாளர் ஒருவருக்கும் பரிசு வழங்குவதைப் படங்களில் காணலாம்.

# நீதிமன்றச் செய்திகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதியில் வரி அனுமதிப்பத்திரம், தலைக் கவசம் மற்றும் காப்புறுதி இன்றி வாகனம் செலுத்திய நபருக்கு 10 ஆயிரத்து 500 ரூபா அபராதம் யாழ்.நீதவான் நீதிமன்றம் விதித்துள்ளது.

♦ ♦ ♦

யாழ்.நகரப் பகுதியில் மதுபோதையில் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய நபருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் யாழ்.நீதவான் நீதிமன்றம் விதித்துள்ளது.

♦ ♦ ♦

குருநகர் பகுதியில் வீதியில் மதுபோதையில் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்த 2 நபர்களுக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் யாழ்.நீதவான் நீதிமன்றம் விதித்துள்ளது.

♦ ♦ ♦

குருநகர் பகுதியில் மது அருந்திவிட்டு போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்த 7 பேருக்கு 17500 ரூபா அபராதம் யாழ்.நீதவான் நீதிமன்றம் விதித்துள்ளது.

♦ ♦ ♦

யாழ்.நகரப் பகுதியில் சட்டவிரோதமாக வீதியில் கட்டடப் பொருட்கள் போட்ட 3 நபர்களுக்கு 1500 ரூபா அபராதம் யாழ்.நீதவான் நீதிமன்றம் விதித்துள்ளது.

நேற்றுமுன்தினம் வீதிப் போக்குவரத்துப் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின்போது கொட்டடி, சோமசுந்தரம் வீதி, ஸ்ரான்லி வீதிப் பகுதியில் சல்லிக் கல் மற்றும் மணல்களை வீதியில் போட்ட குற்றத்துக்காக மூவருக்கும் தலா 500 ரூபா வீதம் தண்டம் செலுத்துமாறு யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா உத்தரவிட்டு தீர்ப்பளித்தார். (எஸ்)

# வீதிகளில் சமச்சீராகச் சென்று விபத்துக்களைத் தேடவேண்டாம்

(யாழ்ப்பாணம்)

மாணவர் பாடசாலைக்குச் செல்லும்போது இடதுபக்கமாகச் செல்லவேண்டும். கூட்டமாக சமச்சீராகச் சென்று விபத்துக்களை தேடிக்கொள்ள வேண்டாம் என யாழ்.பொலிஸ் போக்குவரத்துப் பிரிவைச் சேர்ந்த அதிகாரி யூ.டி.டபிள்யூ ஜயதிலக தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் விபத்துக்களினால் காயப்பட்டுள்ளவர்கள் ஏராளமானவர்கள். இதற்குக் காரணம் போக்குவரத்து விதிகளை அறியாமையே ஆகும் என்றார்.

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி ஜின்னா மைதானத்தில் மாணவர்களுக்கான வீதி நடைமுறை பற்றி பிரசாரம் நேற்றுமுன்தினம் காலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அதிபர் எம்.என்.ஏ.எம்.முபாறக் மற்றும் விளையாட்டு, உடற்பயிற்சி ஆசிரியர்களும் கலந்துகொண்டார்கள். (105)

# மீளக்குடியமர்ந்தோரின் நலன்கருதி புதிய பஸ் சேவையை ஆரம்பிக்குக

## வலி.வடக்குப் பிரதேச செயலர் ஸ்ரீமோகனன்

(தெல்லிப்பளை)

வலி.வடக்கில் மீளக்குடியமர்ந்த மக்களின் போக்குவரத்து நலன்கருதி மக்களின் இடப்பெயர்வுக்கு முன்னர் இலங்கைப் போக்குவரத்து சபையின் கோண்டாவில் சாலையில் மேற்கொள்ளப்பட்டு வந்த 768, 769 ஆம் இலக்க பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு கோரி வலி.வடக்குப் பிரதேச செயலர் க.ஸ்ரீமோகனன் போக்குவரத்துச் சபை பொது முகாமையாளருக்கு (கோண்டாவில்) கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தற்போது யாழ்.மாவட்டத்தின் வலிகாமம் வடக்கில் சில பிரதேசங்கள் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டு அவர்கள் இயல்பு வாழ்வுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

வலிகாமம் வடக்கில் பிரசித்தி பெற்ற நகுலேஸ்வரம் ஆலயம் அமைந்துள்ளதுடன் அச்சுற்றாடலிலும் கொல்லங்கலட்டி, இளவாலை போன்ற பகுதிகளிலும் கணிசமானளவு மக்கள் மீளவும் வசிக்கத் தொடங்கியுள்ளனர். எனினும் இவர்களது போக்குவரத்துத் தேவை எதிர்பார்த்தளவு இன்னமும் பூர்த்தி செய்யப்படாமையால் பல்வேறு சிரமங்களுக்கு அம்மக்கள் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டு முன்பு (1990 களிற்கு முன்) சேவையிலீடுபட்டதைப் போன்று இல.768 மார்க்க சேவையினை கீரிமலையிலிருந்து தச்சன் காட்டுச் சந்தி, கொல்லங்கலட்டி, அம்பனை, அளவெட்டி, மாசியப்பிட்டி, கந்தரோடை, சுன்னாகம் ஊடாக யாழ்ப்பாணம் வரையும் 769 ஆம் மார்க்க சேவையினை கீரிமலையிலிருந்து மாவிட்டபுரம், காங்கேசன்துறை வீதியூடாக யாழ்ப்பாணம் வரையும் மீள ஆரம்பிக்க உடன் ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நிஸ்கோ வேலைத் திட்டங்களுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் (நிஸ்கோ) பிரிவினரால் 2012 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள ஆறு வகையான வேலைத்திட்டங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது சம்பந்தமாக நிஸ்கோ பொது முகாமையாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாண மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற நிஸ்கோ பிரிவினால் 18 - 35 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர், யுவதிகளுக்குப் பின்வரும் வேலைத்திட்டங்கள் செயற்படுத்த உள்ளது. கீழ் இவற்றுக்குப் பொருத்தமானவர்கள் 05.03.2012 இற்கு முன் பதிவுத் தபாலில் பி.பஞ்சலிங்கம், பொதுமுகாமையாளர் (நிஸ்கோ), தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், வீடமைப்புக் கட்டடம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு அறியத் தரப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்கும் போது கடித உறையில் இடதுபக்க மூலையில் விண்ணப்பிக்கும் விபரத்தினைக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பம் கணினியில் தட்டச்சு செய்திருத்தல் வேண்டும்.

வேலைத்திட்டங்களின் விபரம் வருமாறு:


தொழிற்பயிற்சி அதிகார சபையில் பயிற்சி பெற்றுச் சான்றிதழ் வைத்திருக்கும் பயிற்சி, இளைஞர்-யுவதிகளுக்கு உபகரணம் வழங்கல், கிராமியக் குழு அமைத்துக் கடன் வழங்கல், சுய தொழில கடன் வழங்கல், வியாபாரத்துக்காக சைக்கிள் நடமாடும் வண்டிகள் வழங்கல், இளம் விவசாயிகளுக்குக் கடன் வழங்கல், இளம் விவசாயிகளுக்கு விவசாய உபகரணம் வழங்கல், விழிப்புக்குழு நடாத்துதல். பயிற்சி பெற விரும்புவோர் நிஸ்கோவில் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இசை வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்குத் தெல்லிப்பளைப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் மாணவர்களின் நலன்கருதி நடத்தப்படுகின்ற இசை வகுப்புக்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

வழமை போன்று வாரத்தில் செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமைகளில் மாலை 3.30 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றது. இதில் மாணவர்கள் பங்குபற்றி பயன்பெறுமாறு வலி.வடக்குப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.



நெதர்லாந்து அரசாங்கத்தினதும் இலங்கை அரசாங்கத்தினதும் 104.5 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுவரும் யாழ்ப்பாண ஒல்லாந்தர் கோட்டை புனர்நிர்மான வேலைத்திட்டம் துரிதமாக நடைபெற்று வருவதனைக்காணலாம்.

(படம் பார்த்தீபன்)

# இடத்துக்கிடம் மாறுபடும் கட்டணங்கள்; தனியார் பேருந்துகளில் பயணிகள் சிரமம்

(புதுக்குடியிருப்பு)

அண்மையில் எரிபொருட்களின் விலையேற்றத்தைத் தொடர்ந்து பேருந்துகளின் பயணக் கட்டணங்களும் அதிகரிக்கப்பட்ட நிலையில் தற்போது சில தனியார் பேருந்துகளில் கட்டணங்கள் வித்தியாசப்படுவதை அவதானிக்க முடிகிறது.

குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்து புதுக்குடியிருப்புக்கு பயணம் செய்பவர்களிடம் 160 ரூபாவும், புதுக்குடியிருப்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்குப் பயணம் செய்பவர்களிடத்திலிருந்து 150 ரூபாவும் கட்டணமாக சில தனியார் பேருந்து நடத்துநர்களால் அறவிடப்படுகிறது.



இதேபோன்று புதுக்குடியிருப்பிலிருந்து விசுவமடு - றெட்பானா வரைக்கும் 50 ரூபாவும், பின்பு அதேயிடத்தில் இருந்து புதுக்குடியிருப்பு வரைக்கும் 40 ரூபாவும் கட்டணமாக பேருந்தில் அறவிடப்பட்டதாக பயணியொருவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இடத்துக்கிடம் கட்டணங்கள் மாறுபடுவதால் தனியார் பேருந்துகளில் பயணம் செய்யும் பொதுமக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ள நிலை ஏற்படுகிறது.

எரிபொருட்களின் விலையேற்றத்தினை தொடர்ந்து ஒவ்வொருஇடங்களுக்கான அதிகரிக்கப்பட்ட கட்டணங்களின் விபரம் ஊடகங்களில் வெளிவந்த நிலையில், இவ்வாறு கட்டணங்கள் வித்தியாசப்படுவது குறித்துப் பயணிகள் பலரும் விசனம் தெரிவிக்கின்றனர். (138)

# மண்டைதீவில் இலவச குடிநீர்; பொலிஸார் வழங்குகின்றனர்

(மண்டைதீவு)

மண்டைதீவில் கடற்படையினர் தங்கியிருந்த பகுதியில் உள்ள வீடுகளில் மீளக்குடியமர்ந்தவர்களுக்கு அந்தப்பகுதியில் உள்ள பொலிஸாருக்கு நீர் கொண்டுவரும் பௌசர்களில் மேலதிகமாகக் கொண்டுவரும் தண்ணீரை அம்மக்களுக்கு பொலிஸார் இலவசமாக வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்படையினர் குடியிருந்த 3ஆம் மற்றும் 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கத்தோலிக்க மக்களுக்கே இவ்வாறு குடங்களில் நீர் வழங்கப்படுகிறது.

இந்தப்பகுதியில் இரண்டு நீர்த் தாங்கிகள் கடற்படையினர் இருந்த காலத்தில் நீர் வழங்கல் சபையினரால் அமைக்கப்பட்ட பொழுதும் பொதுமக்கள் குடியமர அனுமதி இல்லாத பகுதி ஆனதால் இவற்றுக்கு நீர் குழாயில் இருந்து இணைப்பு வழங்கப் படாதிருந்தது.

இந்தத் தாங்கிகளுள் பொலிஸாரின் பௌசர்களில் கொண்டு வரும் நீரால் நிரப்பி பொதுமக்களின் பாவனைக்கு வழங்கப் படுகிறது.

மண்கும்பானில் இருந்து நீர்வழங்கல் சபையினர் குழாய் மூலம் வழங்கிவரும் நீரானது மக்களது தேவைக்கு மட்டு மட்டாக இருப்பதால் மேலதிக நீரை வழங்குவதானது பெரும் உதவியாக இருப்பதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை பொது மக்களின் தேவைகளுக்காக பொது சனத்தொடர்பதிகாரியின் (PRO) காரியாலயம் பிரதான வீதியில் உள்ள ஒரு வீட்டில் 3 நாட்களும், கிழக்கே துறைமுகப்பகுதியில் 3நாட்களும் இயங்கிவருவ தாகவும் தெரிவிக்கப்படுகிறது. (23)

# டெங்கு பெருகும் சூழல்; மூவருக்கு எதிராக வழக்கு

(திருநெல்வேலி)

கொக்குவில்- பொற்பதி வீதியில் நுளம்புகள் பெருகும் வகையில் வீடுகளை வைத்திருந்த மூன்று குடியிருப்பாளர்களுக்கெதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கோப்பாய் சுற்று சூழல் பொலிஸாரும், கொக்குவில் சுகாதாரப் பரிசோதகர் ம. அனுசனும் இணைந்து நேற்று முன்தினம் மேற்படி பகுதியில் மேற்கொண்ட சுகாதார நடவடிக்கைக்கான, சோதனையில் இம் மூன்று வீடுகளிலும் உள்ள நீர்த் தொட்டிகளில் குடம்பிகள் பெருகிக்காணப்பட்டன.

இதனால் இவ்வீட்டு உரிமையாளர்கள் மீது கோப்பாய் பொலிஸாரினால் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.எதிர்வரும் 29ஆம் திகதி புதன்கிழமை இவர்களை யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜராகுமாறு பொலிஸார் உத்தரவிட்டுள்ளனர். (137)

## முரசின் இன்றைய பலன்

(26.02.2012 -ஞாயிற்றுக்கிழமை)

கர வருஷம் மாசி மாதம் 14 ஆம் திகதி. சதுர்த்தி, மரணயோகம் முற்பகல் 9.52 வரை.

நட்சத்திரம் ரேவதி அமிர்தயோகம் காலை 7.59 வரை.

இராகுகாலம். 4.59 - 6.29 வரை. சுபநேரம் 9.29 - 10.59 வரை.

எமகண்டம் 12.29 - 1.59 வரை. குளிகை காலம் 3.29 - 4.59 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பிரயாணம், காரியானு கூலம், சுபகாரிய ஈடுபாடு, நண்பர்களால் உதவி. |
| ரிஷபம் | பரிசுகள், உத்தியோக உயர்வு, கௌரவப் பதவிகள், பெரியோர் நட்பு. |
| மிதுனம் | பெரியோர்கள் ஆசி, இடமாற்றம், அனாவசிய செலவுகள், அவசரம் கூடாது. |
| கடகம் | திடீர் செலவுகள், ஆன்மிக ஈடுபாடு, கடமையில் சிறப்பு, பலப்படும் உறவுகள். |
| சிம்மம் | புதுமுயற்சி, சகோதரர்உதவி, முன்னேற்றம், வழக்கில் வெற்றி. |
| கன்னி | புதுமுயற்சி கூடாது, எதிர்ப்பலைகள், கடன் படல், அதிகாரிகள் உதவி. |
| துலாம் | ஞாபகமறதி, ஆடம்பரவாழ்க்கை, காரியானு கூலம், மனதில் சங்கடம். |
| விருச்சிகம் | வாகன சுகம், இருப்பிடவசதி, போட்டிகள் குறையும், முன்னேற்றம். |
| தனுசு | வாகன சுகம், இறைவழிபாடு, மறைமுகமான எதிர்ப்பு, கௌரவமான பதவி. |
| மகரம் | அன்னியரால் சகாயம், விடாமுயற்சி, குடும்பப்பரிவு, உறவினர் உதவி. |
| கும்பம் | புகழ் சேரும், தொழில் ஆர்வம், வைத்தியச் செலவு, புத்திரப்பேறு. |
| மீனம் | மனதில் தெளிவு, சண்டை சச்சரவுகள், புதுக்கடன், நண்பர்கள் உதவி. |

# கிளிநொச்சியில் தென்னைச் செய்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தென்னைப்பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளில் தென்னை அபிவிருத்திச் சபை ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் ஏற்கனவே 30 ஆயிரம் ஏக்கரில் தென்னைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப் பட்டிருந்தது. இதில் சுமார் 65 விதமான தென்னை மரங்கள் அழிவடைந்த நிலையில் காணப் படுவதால், மானியத் திட்டத்தின் கீழ் தென்னைப்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மானியத் திட்டத்தின் கீழ் கடந்த வருடம் மட்டும் சுமார் 19 ஆயிரம் தென்னம்பிள்ளைகள் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்ததாகவும் இவ்வருடம் மேலும் ஒரு இலட்சம் தென்னம்பிள்ளைகளை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக தென்னை அபிவிருத்திச் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை இத்திட்டத்தின் கீழ் ஆண்டு 6 இல் கல்வி கற்றும் அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்கும் தலா இரண்டு தென்னைம்பிள்ளைகள் வீதம் மாவட்டத்தில் உள்ள 30 பாடசாலை மாணவர்களுக்கு 2 ஆயிரத்து 650 தென்னம் பிள்ளைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (142)

# தொழிற்துறை தெரிவுக்கு சுயதொழில் வழிகாட்டி சேவை

(நல்லூர்)

தொழில் நாடும் இளைஞர், யுவதிகளுக்கு தமக்குப் பொருத்தமான தொழில் ஒன்றைத் தெரிவு செய்வதற்கான தொழிற்சந்தை மற்றும் சுயதொழில் வழிகாட்டி சேவை நாளை திங்கட்கிழமை காலை 9.00 மணிதொடக்கம் பிற்பகல் 2.00 மணிவரை நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உற்பத்தித்திறன் மேம்பாட்டு, அமைச்சு, மனித வலு, வேலை வாய்ப்புத்திணைக்களம், தொழில் வழிகாட்டல் பிரிவு, யாழ். மாவட்ட செயலகம் மற்றும் நல்லூர் பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் நடைபெறும் இந்நிகழ்வில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்களுக்கு ஆட்சேர்த்தல், சுயதொழில் ஆரம்பிப்பதற்கான வழிகாட்டல், தொழிற்பயிற்சிப் பாடநெறிகள் பற்றிய தகவல்கள் உட்பட பல சேவைகள் வழங்கப்படவுள்ளன.

இச் சேவைகளில் கலந்து கொள்ளும் உள்நாட்டு, வெளிநாட்டு தொழில்களை நாடுவோர் தங்கள் சுயவிபரங்களையும் எடுத்து வரும்படி கோரப்பட்டுள்ளது. (26)

# விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பளைப்பிரதேச செயலர் பிரிவில் பளைப் பிரதேச கலாசார பேரவையினரால் கலாசார விழிப்புணர்வு தொடர்பான கலந்து ரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ் விழிப்புணர்வுக் கருத்தரங்கிற்கு அல்லிப்பளைக் கிராமம் தெரிவு செய்யப்பட்டு கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது.

இக் கருத்தரங்கினை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், நன்னடத்தை உத்தியோகத்தர், கிராம அலுவலர், கலாசார உத்தியோகத்தர் ஆகியோர் இணைந்து நடத்தியிருந்தனர்.

பளைப் பிரதேச கலாசார உத்தியோகத்தர் பா.ஜெய தாசனால் மேற்கொள்ளப்பட்ட இக்கலந்துரையாடலில் சுமார் நூறுக்கும் மேற்பட்ட கிராம மக்கள் கலந்துகொண்டனர். (142)

# மூடப்பட்டுள்ள நூலகம்; விசனமடையும் பெற்றோர்



(தெல்லிப்பளை)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரியின் ஆரம்பப் பிரிவிற்கான நூலகம் பயன்பாடு இன்றி நீண்டகாலமாக மூடப்பட்டுள்ளது.

இக்கட்டடம் அரச நிதியுதவியுடன் பல இலட்சம் ரூபாசெலவில் கட்டடப்பட்டது. பின்னர் சுன்னாகம் ஹற்றன் நஷனல் வங்கியினால் 75 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளன.

எனினும் கடந்த இரு வருடங்களாக இந்த நூலகம் பயன்பாடின்றி மூடப்பட்டுள்ளதால் மாணவர்கள் நூலக செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாது சிரமப்படுவதாக பெற்றோர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (44)

# தனித்து ஓடுதல்: தமிழ் சமூகத்திற்குக் கெடுதல்

கண்டியில் நடந்தேறிய பிராந்திய முதலமைச்சர்கள் மாநாட்டில் பேசிய கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், மாநிலங்களுக்கு வேண்டிய அதிகாரங்கள் பதிமூன்றாவது சட்டதிருத்தத்திலேயே உள்ளன எனவும், அவற்றை சரியாக செயற்படுத்தினாலேயே போதும் எனவும் கூறியதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோருவது போல், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தேவையில்லை என்ற தொனியில் பிள்ளையான் என்று அறியப்படும் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் கருத்து அமைந்துள்ளதோ என்று எண்ணத் தோன்றுகிறது....


அவரது கருத்துகளுக்கும் அப்பாற சென்று நோக்கினால், கூட்டமைப்பு தலைமைப் பொறுப்புகளில் உள்ள தலைவர்களைப் போலவே, அவரும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அவர்களில் பலரைப் போலவும் அரசுக்கு எதிரான போராளியாக பல ஆண்டுகள் இருந்தவர்.


கட்சி மாறினால் காட்சி மாறும் என்பது அவர் விடயத்தில் உண்மையானால், அதுவே கூட்டமைப்பு தலைவர்களுக்கும் பொருந்தும். அதிலும் குறிப்பாக, விடுதலைப் புலிகள் இயக்கத்தால் ஒரு காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களே தமிழ் அரசியல் தலைவர்களாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்றால், இவர்களில் பலரையும் விடவும் பிள்ளையானும் "கேணல்" கருணா என அழைக்கப்பட்டு வந்த விநாயகமூர்த்தி முரளிதரனும் மட்டுமே மிஞ்சுவர்.

இவ்வாறெல்லாம் கூறுவதால் பிள்ளையானுக்கு தமிழ் சமூகத்தின் அறுதி பெரும்பான்மையினரின் ஆதரவு இருப்பதாக அர்த்தம் இல்லை. நாடாளுமன்றம் மற்றும் மாவட்ட அளவிலான தேர்தல்களின் முடிவுப்படி அவரது கிழக்கு மாகாணத்தில் கூட கூட்டமைப்பிற்கே தமிழ் சமூகத்தின் அதிக ஆதரவு இருக்கிறது என்று கூறலாம்.

அப்படியென்றால், கிழக்கு மாகாணம் மற்றும் கொழும்பு நகரம் உள்ளடங்கிய மேற்கு மாகாணம் ஆகிய பகுதிகளில் பரவலாக உள்ள தமிழ் மக்களின் எண்ணவோட்டத்தை கூட்டமைப்பும், கூட்டமைப்பு மட்டுமே பிரதிபலிக்கிறதா என்ற கேள்வி எழுகிறது.







இதுபோன்ற குதர்க்கமான முறைகளிலேயே முன்பு தமிழ் தலைமையின் பிரதிநிதித்துவத்தனம் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனை மாற்றி, எல்லா தமிழ் பிரதிநிதித்துவங்களையும் இணைத்தே இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதே இந்த அரசின் நிலைப்பாடு என்று கூறப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில் வடக்கில் இருந்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி. கட்சி மட்டுமல்ல, வடக்கிலும் கிழக்கிலும் உள்ள முஸ்லிம் இனத்தவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் பல்வேறு கட்சிகளும் பங்குபெற வேண்டும் என்பதே சரியான நிலைப்பாடாக இருக்கும்.

அதே சமயம், எப்படி இந்த கட்சிகள் எல்லாம் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழ் பேசும் மக்களின் அரசியல் எதிர்பார்ப்புகளை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்களோ அதற்கும் மேல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் பெரும்பாலானவர்களைப் பிரதிநிதிப்படுத்துகிறது என்பதே உண்மை. ஆனால், எந்த ஒரு சாராரும் மட்டுமே தமிழ் பேசும் மக்களின் அரசியல் தலைமைத்துவம் பெற்றுள்ளவர்கள் என்று கருதி செயற்படுவது, "பழைய குருடி, கதவை திறடி" என்ற நிலைமையிலேயே தமிழ் சமூகத்தை கொண்டு செல்லும், கொண்டு தள்ளும்.

இதற்கு முடிவு தான் என்ன? எப்படி இனப் பிரச்சினைக்கு தீர்வு காண அரசு, பேச்சுவார்த்தைக்கான முஸ்தீபுகளை தொடங்க வேண்டும் என்று கூட்டமைப்பும் சர்வதேச சமூகமும் எதிர்பார்க்கிறதோ, அது போன்றே வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழ் பேசும் அனைத்து மக்களையும் அவர்களது உள்ள கிடக்கையையும், அவர்களது அரசியல் தலைமைகளையும் உள்ளடக்கிய ஓர் நிலைப்பாட்டை எடுக்க கூட்டமைப்பு முயற்சி செய்ய வேண்டும்.

வடக்கு - கிழக்கு இணைப்பு, பொலிஸ் அதிகாரம் போன்ற பல்வேறு பிரச்சினைகளில் வெவ்வேறு நிலைப்பாட்டை கொண்டுள்ள இந்த கட்சிகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு அரசியல் செய்யலாம் என்று கூட்டமைப்பு தொடர்ந்து கருதி வருமேயானால், அவர்களை எப்போதும் ஆதரித்து வரும் சர்வதேச சமூகமும் உண்மை நிலையை உணர்ந்து செயற்பட அதிக நாளாகாது.

கூட்டமைப்போடு உள்ளாட்சி தேர்தல் தொடங்கி செயற்பட்டு வரும் ஆனந்தசங்கரியின் தமிழர் விடுதலை கூட்டணி மற்றும் சித்தார்த்தன் தலைமையிலான "புளட்" போன்ற சரித்திரம் படைத்த கட்சிகளையே "வேண்டா விருந்தாளி"யாக கருதி வீட்டுக்கு வெளியே வைத்து மிச்சம், மீதி உணவை அளித்தே வந்துள்ள கூட்டமைப்பு தங்களை எப்படி நடத்தும் என்று முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகள் சந்தேகப்பட்டால், அதில் உண்மை உள்ளது.

பதின்மூன்றாவது சட்டதிருத்தம் குறித்து முதலமைச்சர் சந்திரகாந்தன், தான் கூறவருவது என்ன என்பதை தெளிவுபடுத்த வேண்டும். உதாரணத்திற்கு, மாநிலங்களுக்கு பொலிஸ் அதிகாரம் தேவையா, இல்லையா? என்பது போன்ற கேள்விகளுக்கு தனது நிலைப்பாட்டை அவரும் சரி, டக்ளஸ் தேவானந்தா போன்ற கூட்டமைப்பிற்கு வெளியே உள்ள தமிழ் தலைவர்களும் சரி, வெளிப்படுத்த வேண்டும். அதிலும் குறிப்பாக, வடக்கு - கிழக்கு இணைப்பு குறித்து அவர்களது நிலைமை என்ன? தமிழ் பேசும் முஸ்லிம் கட்சிகளின் நிலைமை என்ன?

எப்படி, "தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்" என்று அரசு இருக்க கூடாது என்று கூட்டமைப்பு எதிர்பார்க்கிறதோ, அதுபோன்றே அதன் எண்ணவோட்டமும் செயற்பாடுகளும் இருக்க வேண்டும். அல்லாது, தங்களுக்குள்ளேயே பேசிக்கொண்டு, தங்களது நிலைப்பாட்டையே பொதுவாக வரவேற்கும் தமிழ் சமூகத்தின் பிரதிநிதிகளுடன் மட்டுமே சந்தித்து பேசிவருவது, "குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டும்" வகையாகவே அமையும்.

பின்னர், அரசு தங்களை மீண்டும் ஏமாற்றி விட்டது, சிங்கள பேரினவாதம் தங்களை ஏமாற்றிவிட்டது என்று மட்டும் கூறுவதெல்லாம், தங்களை தாங்களே ஏமாற்றிக் கொண்டு, அதில் ஒருவித "கொடூர திருப்தி" (vicarious satisfaction) அடைவதற்கு சமமாகும். இது தான் சமகால சரித்திரம் படிப்பித்துள்ள பாடமும் ஆகும்.

**என். சத்தியமூர்த்தி**
**கட்டுரையிலிருந்து**

# ஏகப்பிரதிநிதித்துவத்தின் ஊற்று!

தமிழர்கள் தமிழ் தேசியத்துக்காக மட்டும்தான் போராட வேண்டும், மற்றெந்தக் கோரிக்கைகளுக்காகவும் போராடக்கூடாது என்ற கருத்தும், தமிழர்களுக்கு ஒரேயொரு அமைப்புதான் தலைமைதாங்க வேண்டும் என்ற கருத்தும், புலிகளால் உருவாக்கப்பட்டது என்ற கருத்து பலரிடம் உள்ளது. ஆனால் உண்மையில் அந்தக் கருத்தை முதலில் உருவாக்கியவர்கள் புலிகள் அல்ல.




தமிழரசுக்கட்சி தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தான் அந்தக் கருத்தின் பிதாமகர் என்பதை, இலங்கையில் கம்யூனிஸ்ட் இயக்க முன்னோடிகளில் ஒருவரான தோழர் மு.கார்த்திகேசன் மூலம் ஏற்கெனவே அறிந்திருந்தேன். தோழர் கார்த்திகேசன் 1940களின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்புகளை உருவாக்கும் பொருட்டு கட்சியால் அனுப்பப்பட்டு அங்கு சென்று கட்சி வேலைகளை முன்னெடுத்த போது, தொழிலாளர்களும் விவசாயிகளும் தாழ்த்தப்பட்ட மக்களும் உரிமை மறுக்கப்பட்ட பெண்களும் தமது உரிமைகளுக்காக தமது சமூகத்துக்குள்ளேயே போராடுவது அவசியம் என்ற கருத்தை வலியுறுத்தி வந்தார்.

நிலப்பிரபுத்துவ பழமைவாதத்தின் பிடியில் சிக்கிக்கிடந்த யாழ்ப்பாணத்தில் தோழர் கார்த்திகேசன் விதைத்த இந்தப் புதுமைக் கருத்துக்கள், அவரை எல்லோரும் திரும்பிப் பார்க்க வைத்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் முதற் தட்வையாக செல்வநாயகத்தை ஒரு பொது நிகழ்ச்சியின் போது கார்த்திகேசன் சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

அந்த நிகழ்ச்சியை ஒழுங்குபடுத்திய நிர்வாகிகளில் ஒருவர் கார்த்திகேசனை செல்வநாயகத்துக்கு அறிமுகப்படுத்திய போது, "நீங்கள்தான் தமிழர்களில் இரண்டு விதமான தமிழர்களைப் பற்றிப் பேசித்திரியும் கார்த்திகேசனா?" என செல்வநாயகம் தன்னிடம் வேண்டா வெறுப்பாகக் கேட்டதாக கார்த்திகேசன் ஒருமுறை என்னிடம் கூறினார்.

தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் வேலை செய்பவர்கள் தமிழ் தேசியம் மட்டும்தான் பேச வேண்டும் எனபதும், ஏகப்பிரதிநிதித்துவத் தலைமைதான் இருக்க வேண்டும் என்பதும், பிற்காலத்தில் புலிகளால் துப்பாக்கி முனையில் நடைமுறைப்படுத்தப் பட்டதே தவிர, அது புலிகளுக்கு முன்னரே அவர்களது பிதாமகர்களால் ('தந்தை' செல்வா) உருவாக்கப்பட்ட ஒன்று என்பதும், அது புலிகள் அழிந்த பின்னரும் இன்றும் தொடர்கின்றது என்பதும் தான் உண்மை. அப்படிப் பார்க்கையில் பன்மைக் கருத்துக்களும், பல்வகைத் தலைமைகளும் நிலவுகின்ற சிங்கள சமூகத்தின் ஜனநாயகத் தன்மை, தமிழர்களுடைய தைவிட பலபடி முன்னேற்றகரமானது என்றுதான் சொல்ல வேண்டும்.




**-தோழர் மணியம் எழுதும் தொடரில்**

**1851** இல் தங்கம் கிடைத்ததால் அவுஸ்ரேலியாவின் விக்டோரியாவுக்கு பிரித்தானியாவில் இருந்து மட்டுமல்ல ஐரோப்பா சீனாவில் இருந்து குடியேற்றவாசிகள் வந்து குடியேறினார்கள். இதனால் விக்டோரியா நியூ சவுத் வேல்சுக்கு போட்டியாக வளர்ந்தது மட்டுமல்ல மெல்பன் என்ற இரண்டாவது நகரம் உருவாக காரணமாக இருந்து. இதில் தங்கம் கிடைத்த இடங்கள் பலரட் (Ballarat), பெண்டிகோ (Bendigo). அவைக்கு சுற்றி உள்ள பகுதிகள் எங்கும் தங்கம் தோண்டப்பட்டது.

மெல்பன்னில் 150 கிலோமீட்டர் தூரத்தில் டால்ஸ்போட் என்ற நகரம் தங்கம் தோண்டப்பட்ட இடங்களுக்கு அருகாமையில் உள்ளது.

# தங்கத்தால் உருவாகிய விக்டோரியா




இந்த பிரதேசங்களில் நிலத்தடி தண்ணீரில் பல கனிமங்களோடு வருவதால் உடல் நலத்துக்கு நல்லது என்று ஏராளமானவர்கள் செல்கிறார்கள்.

கெப்பேன் பிரிங் குளிப்பதற்கும் உடம்பை மசாஜ் செய்வதற்கும் பெருமளவு உல்லாசப் பிரயாணிகள் பல இடங்களில் இருந்து வருகிறார்கள்.

கேப்பேன் நகரின் மத்தியில் பல சதுர மைல்கள் தங்கம் தோண்டிய இடங்கள் இப்பொழுது மீண்டும் காடாக வளர்க்கப்பட்டு tracking செய்வதற்கு ஏற்ற வனப் பிரதேசமாக்கி இருக்கிறார்கள். நிலத்தை கிண்டி கனிமங்களை எடுததுவிட்டு மீண்டும் அந்த பிரதேசங்களை வனமாக்கி பாவிப்ப நல்லது மட்டுமல்ல அதை உல்லாசப் பிரயாணிகளை கவர்வதற்காக ஈகோ ரூரிசமாக்கும் (ECO-TOURISM) செயற்பாடாகும்

டால்ஸ்போட் அழகான வாவிகளையும் பூங்காவையும் கொண்ட நகரமாகும். இந்தப் பிரதேசத்தில் மிக அருமையான திராட்சைகள் விளைவதால் அங்கு பெறப்படும் ரெட் வைன் எவ்வளவும் குடிக்கலாம். ஆனால் என்ன மது மயக்கத்தை எம்மையறியாமல் கூட்டிவிடும்.

விடுமுறையை களிப்பதற்கு சிறந்த இடங்களில் ஒன்று.





# பாஸ்வேர்ட் சேமிப்பு!

இன்றைய உலகில் மின்னஞ்சலை (ஈ-மெயில்) பன்படுத்தாத நபர்கள் யாரும் இல்லை. ஒவ்வொரு நபரும் ஒன்றுக்கு மேற்பட்ட மின்னஞ்சல்களை பயன்படுத்துகின்றனர். எனவே ஒவ்வொரு கணக்கிற்கும் வெவ்வேறான பாஸ்வேர்ட் கொடுத்து இருப்பதால் அதை அனைத்தையும் ஞாபகம் வைத்து கொள்வது என்பது இயலாத காரியம். இச்சூழ்நிலையில் உங்களது பாஸ்வேர்ட்டை ஞாபகத்தில் வைத்துக் கொள்வதற்கு ஒரு சிறிய மென்பொருள் (software) உதவி புரிகிறது.

Password Protect இதில் உங்களின் அனைதது பாஸ்வேர்ட்களையும் சேமித்து அனைத்திற்கும் சேர்த்து ஒரே ஒரு பாஸ்வேர்ட் கொடுத்து கொள்ளலாம். அதை மட்டும் ஞாபகம் வைத்துக் கொண்டால் போதும்.


இந்த மென்பொருளின் சிறப்பம்சங்கள்: எந்தவொரு நபரும் உங்களது பாஸ் வேர்ட்டை திருடாதபடி கடினமான பாஸ்வேர்ட் இந்த மென்பொருள் மூலம் உருவாக்கலாம். குறிப்பிட்ட ஒரு கோப்பை ஒட்டு மொத்த பாஸ்வேர்ட் ஆக தெரிவு செய்யும் வசதி. மின்னஞ்சல், இயங்குதளம் மற்றும் இணையம் என அனைத்திற்கும் தனித்தனியான பாஸ்வேர்ட்டை சேமித்து வைத்துக் கொள்ளும் வசதி. போர்ட்டபிள் மென்பொருள் என்பதால் கணினயில் நிறுவி செய்ய வேண்டிய அவசியமும் இல்லை மற்றும் ஏராளமான வசதிகள் உள்ளது.




இதற்கு முதலில் இந்த மென்பொருளை தரவிறக்கம் செய்தால் வரும் Zip கோப்பை Extract செய்து Keepass என்ற கோப்பை விரியுங்கள். அதன் பின் தோன்றும் விண்டோவில் அதில் உள்ள New என்ற பட்டனை அழுத்தவும். அதன் பின் தோன்றும் விண்டோவில் உங்களின் Master pass ward தெரிவு செய்து கொள்ளுங்கள். அதன்பின் தோன்றும் விண்டோவில் உங்களின் pass ward வகையை தெரிவு செய்து கொண்டு Add Entry என்ற பட்டனை அழுத்தி உங்கள் pass ward ஐ சேமித்து கொள்ளலாம்.

இதே முறையில் உங்களையுடைய அனைத்து பாஸ் வேர்ட்களையும் இந்த மென்பொருளில் சேமித்துக் கொள்ளுங்கள். மேலும் இந்த மென்பொருள் மூலம் மிக கடினமான பாஸ்வேர்ட்களை உருவாக்கலாம். இதற்கு Tools - pass ward generate சென்று கடினமான பாஸ்வேர்ட்களை உருவாக்கி கொள்ளலாம். இதன் மூலம் உருவாகும் பாஸ்வேர்ட் தானாகவே இந்த மென்பொருளில் சேமிக்கப்படும்.

# போட்டோக்களுக்கு வண்ணம் தீட்ட



கறுப்பு வெள்ளை போட்டோக்களுக்கு வண்ணம் தீட்டுவதற்கு போட்டோஷொப் போன்ற சிக்கலான புரோகிராம்களில் பொறுமையாகப் பணியாற்ற முடியவில்லை என எண்ணுவோருக்கு, எளிதான சொப்ட்வேர் புரோகிராம் ஒன்று உள்ளது. தொழில் ரீதியாக பயன்படுத்தவும் கையாள்வதற்கும் எளிதானது BlackMagic என்ற இந்த சொப்ட்வேர் தொகுப்பு.

BlackMagic சொப்ட்வேர் விண்டோஸ் இயக்கத்தில் வண்ணம் மாற்றும் பணிக்காகவே வடிவமைக்கப்படடது. கறுப்பு வெள்ளை படங்களை வண்ணத்தில் கொண்டு செல்வது மட்டுமின்றி, வண்ணப் படங்களையும் கறுப்பு வெள்ளையில் மாற்றித் தருகிறது.

போட்டோ எடிட் செய்வதற்கு நிறைய பாடங்களை எல்லாம் இதில் படிக்க வேண்டியதில்லை. இந்த சொப்ட்வேர் தொகுப்பில் "Timebrush" என்ற தொழில் நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதனைப் பெற http://www.blackandwhitetocolor.com/rauml/blackmagic.html என்ற முகவரியில் உள்ள இணைய தளத்திற்குச் செல்லவும். Download BlackMagic என்ற லிங்க்கில் கிளிக் செய்து இதனை தரவிறக்கம் செய்க.

இதனை இன்ஸ்டோல் செய்ய ஒரு ஐகொன் கிடைக்கும். blackmagic.exe என்ற இதில் கிளிக் செய்தால், புரோகிராம் பதியப்படும். நீங்கள் விண்டோஸ் 7 பயன்படுத்துவதாக இருந்தால், இதில் ரைட் கிளிக் செய்து, கிடைக்கும் மெனுவில், Run as administrator என்ற இடத்தில் கிளிக் செய்யவும்.

இன்ஸ்டோல் செய்த பின்னர், புரோகிராமினை இயக்கவும். கிடைக்கும் மெனுவில், Load Image என்ற பட்டனில் கிளிக் செய்தால், வண்ணம் மாற்ற வேணடிய படத்தை இமேஜ் எடிட்டரில் திறந்து வண்ணம் மாற்றும் வேலையைத் தொடங்கலாம். எந்த எந்த பகுதியில், என்ன வண்ணம் அமைக்க வேண்டும் என்பதனைத் தேர்ந்தெடுக்க எளிதான மெனு தரப்படும். படத்திற்கான வண்ணம் மட்டுமின்றி, பின்புலத்தில் இருக்க வேண்டிய வண்ணத்தினையும் அமைக்கலாம்.

நீங்கள் இவற்றைத் தேர்ந்தெடுக்கையில், BlackMagic என்ன மாதிரியான படத்தில் வண்ணங்கள் மாற்றப்படுகின்றன என்பதனை உணர்ந்து, உங்களுக்கு சில ஆலோசனைகளை வழங்கும். இறுதியாக அனைத்து வண்ணங்களும் உங்களுக்கு நிறைவாகத் தோன்றினால், அந்த படத்தினை புதிய பெயரில் சேவ் செய்துவிடலாம். இவை அனைத்தையும் மேற்கொள்ள ஒரு சில நிமிடங்களே ஆகின்றன என்பது இதன் சிறப்பு.

# கூடுதல் கடிகாரங்கள் அமைக்க




விண்டோஸ் 2000 மற்றும் விண்டோஸ் எக்ஸ்பி சிஸ்டங்களில் இல்லாத சிறப்புகளில் ஒன்று, விண்டோஸ் 7 அல்லது விஸ்டா சிஸ்டத்தில் அமைக்கக் கூடிய கூடுதல் கடிகாரங்கள் ஆகும். வழக்கமாக, ஒரு கடிகாரம் மட்டுமே டாஸ்க் பாரில் காட்டப்படும். உலகம் சுருங்கி, தகவல் தொடர்புகள் அதிகரித்து வரும் இந்நாளில் நாம் மற்ற நாடுகளில் அப்போது உள்ள நேரத்தினையும் தெரிந்து கொள்ளவேண்டிய சூழ்நிலைகளைச சந்திக்கிறோம். இதற்காகவே, அண்மையில் வந்துள்ள விண்டோஸகளில் ஒன்றுக்கு மேற்பட்ட, நான்கு வரையிலான, கடிகாரங்களை அமைக்கக் கூடிய வசதி தரப்பட்டுள்ளது.

1. முதலில் டாஸ்க் பாரில் நேரம் காட்டப்படும் Time என்ற இடத்தில் கிளிக் செய்து பின்னர் Change Time and date Settings. என்பதில் கிளிக் செய்திடவும்.
2. அல்லது நேரடியாக Time என் பதில் ரைட் கிளிக் செய்து, Adjust Date/ Time என்ற ஒப்ஷனைத் தேர்ந் தெடுக்கலாம்.
3. கொண்ட்ரோல் பனல் திறந்து Date and Time என்ற ஐகொனில் கிளிக் செய்திடவும்.
4. இப்போது திறக்கப்படும் விண்டோவில் Additional Clocks என்ற ஒப்ஷன் மேல் பிரிவில் கிடைக்கும்.
5. இங்கு கிடைக்கும் add a clock என்ற ஒப்ஷனைத் தேர்ந்தெடுத்தால், மற்ற டேட்டா கேட்கும்.
6. இங்கு நீங்கள் அமைக்க விரும்பும் கடிகாரத்தின் Time Zone ஐத் தேர்ந் தெடுக்க வேண்டியதிருக்கும்.
7. அடுத்து இறுதியாக, நீங்கள் அமைக்க விரும்பும் கடிகாரத்திற்கான பெயரை அதிக பட்சம் 15 எழுத்துக்களில் தரலாம். இவை எல்லாம் முடிந்த பின்னர், Finish கிளிக் செய்திட, கடிகாரம் டாஸ்க் பாரில் காட்டப்படும்.

# அனுப்பிய மெயிலை நிறுத்தலாம்




பெரும்பாலான மெயில் சேர்வர்களில், மின்னஞ்சல் செய்தி ஒன்றை அனுப்ப கட்டளை கொடுத்தவுடன், அந்த மெயில் உடனடியாக அனுப்பப்படும். கட்டளை கொடுத்த பின்னர், அதனைத் திரும்பப் பெற இயலாது. நீங்கள் யாருக்கு அனுப்பினர்களோ, அவரின் இன் பொக்ஸுக்கு அந்த மெயில் சென்றுவிடும். ஒரு நொடியில் இது அனுப்பப்படுகிறது. இதனைத் திரும்பப் பெற பகீரதப் பிரயத்தனம் செய்திட வேண்டும்.

சேர்வரின் அட்மினிஸ்ட்ரேட்டரைத் தொடர்புகொண்டு, மெயிலை நீக்குமாறு கேட்டுக்கொள்ளலாம். ஆனால், பெரும்பாலான சேர்வர் அட்மினிஸ்ட்ரேட்டர்கள் இது போன்ற வேண்டுகோள்களுக்குச் செவிசாய்க்க மாட்டார்கள். இது மற்றவரின் தனிப்பட்ட சுதந்திரத்தில் தலையிடுவது என எண்ணுவார்கள். ஆனால், இணையப் பழக்கவழக்கங்களில் பல வகை மாற்றங்களைக் கொண்டு வரும் கூகுள் நிறுவனம், இதிலும் ஒரு புதிய வசதியைத் தந்துள்ளது. நான் அனுப்பிய மெயிலைத் திரும்பப் பெற எண்ணினால், உடனடியாக அதனை நிறுத்தலாம் இந்த வசதியைப் பயனபடுத்த, மெயிலை அனுப்பிய சில நொடிகளில் செயற்பட வேண்டும். அதிக பட்சம் 30 நொடிகளில் இதனை மேற்கொள்ளவேண்டும்.

இதற்கு Undo Send என்ற பட்டனை அழுத்த வேணடும். இந்த கட்டளை, மெயிலைப் பெறுபவரின் இன் பொக்ஸில் இருந்து அழிப்பதன் மூலம் நடைபெறுவ தில்லை. மெயில்கள் வரிசையில் நிற்கும்போது அவை தடுக்கப்படுகின்றன. மீண்டும் அனுப்பியவரே, Undo Send என்பதனை நீக்கினால் தான் அந்த மெயில் அனுப்பப்படும்.

இதனைச் சோதனை செய்ய, நீங்களே உங்கள் இமெயில் முகவரிக்கு ஒரு மெயிலை அனுப்பி, உடனேயே கேன்சல் செய்து பார்க்கலாம். இந்த வசதி வெப் அடிப்படையில் இயங்கும் ஜிமெயில் தளத்தில் மட்டுமே கிடைக்கிறது.

உங்கள் ஜிமெயில் அக்கவுண்ட்டில் நுழையவும். மெயில் தளத்தின் மேலாக, வலது புறத்தில் உள்ள செட்டிங்ஸ் ஐகொனில் கிளிக் செய்திடவும். கிடைக்கும் மெனுவில் Settings என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். பின்னர் Labs என்னும் டேப்பில் கிளிக்செய்து Undo Send என்னும் டேப் எங்குள்ளது என்று கண்டறியவும். அல்லது, சேர்ச் பொக்ஸில் Undo Send என டைப் செய்து, இந்த வசதி தரப்பட்டிருக்கும் இடத்தினை அறியலாம்.

அந்த இடத்தில் உள்ள Enable என்ற பட்டனில் கிளிக் செய்து, பின்னர் Save Changes என்ற பட்டனையும் அழுத்தவும். ஈ-மெயில் தளத்தில் மாறா நிலையில் இதற்கு பத்து விநாடிகள் நேரம் தான் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனை 5,10,20,30 விநாடிகள் என மாற்றலாம். இந்த நேரத்தினை செட் செய்திட, செட்டிங்ஸ் பக்கத்தில் Undo Send கிளிக் செய்து Send cancellation period என்பதில், நீங்கள் விரும்பும் நேரத்தினை செட் செய்திடலாம்.

இதனை செட் செய்துவிட்டால், ஒவ்வொரு முறை நீங்கள் மெயில் அனுப்பிய பின்னரும், ஒரு பொப் அப் விண்டோவில் "Your message has been sent. Undo. View message" என ஒரு செய்தி கிடைக்கும். இதில் உள்ள Undo லிங்க்கில் கிளிக் செய்தால், அப்போது அனுப்பப்பட்ட அஞ்சல் நிறுத்தப்படும்.

ஜிமெயில் வசதியை இணையதள சேர்வரின் மூலம் பயன்படுத்துவோருக்கு மட்டுமே இந்த வசதி கிடைக்கும்.

அனுப்பப்பட்ட மெயிலை நிறுத்தக் கட்டளை கொடுத்த பின்னர், ஜிமெயில் அதற்கான செயறபாட்டில் இருக்கையில், பிரவுசர் விண்டோவினை மூடினால், அந்த செயற்பாடு மேற்கொள்ளப்படமாட்டாது. அதன் பின்னர், அந்த ஈ-மெயில் அனுப்பப்படுவதனை நிறுத்த முடியாது.

# இன்டர்நெட் அமைப்பில் மாற்றம்



இணையதளத்தின் வழியே நாம் ஒரு கணினியில் இருந்து மற்றொரு கணினிக்கு தகவல்களை பரிமாற முடியும். நமது தகவல்கள் முதலில் சிறு சிறு பொதிகளாக பிரிக்கப்படும். இந்த பொதிகள் மற்றொரு கணினியை அடைய வேண்டுமானால் அதற்கு நெட்வேர்க் அமைப்பும், அடுத்தடுத்த நெட்வேர்க் தளத்தினை அடைய ஒரு இன்டர்நெட் புரோடோகோல் முகவரியும் தேவைப்படுகிறது. இணையதளத்தில் ஒவ்வொரு பக்கத்திற்கும் ஒரு முகவரி மாறுகிறது. இதனை எப்படி அமைத்திட வேண்டும் என்பதனை உலகளவில் பிரதிநிதிகளைக் கொண்டு இயங்கும் இன்டர்நெட் அமைப்பு முடிவெடுக்கிறது.

இதனை இன்டர்நெட் சேவையினை வழங்கும் நிறுவனங்கள் பின்பற்றுகின்றன. இது போன்ற ஒரு பொது கட்டமைப்பில் இருந்தால் தான் அனைத்து இன்டர்நெட் செயல்பாடுகளும் அனைவராலும் இயக்கப்பட முடியும். இதுவரை ஐபிவி4 என்ற கட்டமைப்பில் இன்டர்நெட் முகவரிகள் அமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த கட்டமைப்பில் மேற்கொண்டு பெயர்களை அமைக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விட்டது.

எவ்வளவு வகைகளில் அமைக்க முடியுமோ, ஏறத்தாழ அந்த எண்ணிக்கையில் முகவரிகள் அமைக்கப்பட்டுவிடக் கூடிய சூழ்நிலை இன்னும் சில மாதங்களில் உருவாகிவிடும். எனவே புதிய கட்டமைப்பு ஐபிவி6 என்ற பெயரில் இன்டர்நெட் சேவை அமைக்கப்பட்டு சோதனை செய்து பார்க்கப்பட்டது.

இது அனைத்து வழிகளிலும் சரியானது என்று உறுதி செய்யப்பட்டதால், இனி அந்த அமைப்பே பின்பற்றப்படும். இதற்கான அறிமுக நாள் வரும் ஜூன் மாதம் 16 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது. இன்டர்நெட் வரலாற்றில் இந்த இன்டர்நெட் பெயர் அமைப்பு அறிமுகம் செய்யப்படும் நாள் மிக முக்கியமான நாளாக வரும் காலத்தில் எண்ணப்படும்.


ஐபிவி4 அமைப்பு முகவரியில் (32 பிட் கட்டமைப்பு) ஏறத்தாழ 400 கோடி இன்டர்நெட் முகவரிகள் அமைக்கப்படும். 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலேயே இதில் 90 வீதம் பயன்படுத்தப்பட்டு விட்ட நிலை உருவானது. அதே ஆண்டு ஒக்டோபரில் மிச்சமிருக்கும் நிலை 5 வீதமாக உருவானது.

நாளுக்கு நாள் இன்டர்நெட் தளங்களும் அவற்றிற்கான பெயர்களும் வேகமாக உயர்ந்து வரும் நிலையில், ஐபிவி4 அமைப்பில் மேலும் பெயர்களை உருவாக்க இயலாத நிலை எட்டப்பட்டுவிடும் என்ற அபாயம் உணரப்பட்டது. இதனால் ஐபிவி6 (128 பிட்) அமைப்பு உருவாக்கப்பட்டது. இது முந்தைய அமைப்பினைக் காட்டிலும் எளிதான முறையில் இயங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இனி இரண்டு அமைப்புகளிலும் உருவாக்கப்பட்ட முகவரிகளை இன்டர்நெட்டில் இயங்கும் நெட்வேர்க் நிறுவனங்கள் கையாளும் என தெரிகிறது.

# புலிகளின் மனித உரிமை மீறல்கள்; கூட்டமைப்பு பதில் சொல்ல வேண்டும்

(கொழும்பு)

யுத்த காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் பல்வேறு மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டிருந்தனர். இதனால் நூற்றுக் கணக்கானோர் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இந்த மோசமான மனித உரிமை மீறல்களுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதில் சொல்ல வேண்டும் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.



புலிகளினால் படுகொலை செய்யப்பட்ட தமிழ் அரசியல்வாதிகளின் குடும்ப உறுப்பினர்கள் ஏற்கவே ஜெனீவாவிற்குச் சென்றுள்ளனர். அவர்களுக்கு அங்கு நியாயம் கிடைக்குமா என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

புலிகளினால் கொல்லப்பட்ட அரசியல்வாதிகளின் குடும்ப உறுப்பினர்களுக்குத் தமிழ்த் தேசியக் (புலி) கூட்டமைப்பே பதிலளிக்க வேண்டுமென அவர குறிப்பிட்டுள்ளார்.

மனிதாபிமான மீட்புப் பணிகளின் போது இலங்கை அரசாங்கம் மனித உரிமைவிவகாரங்களில் கூடுதலான கவனம் செலுத்தியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் அரசாங்கம் தற்போது கூடுதல் முனைப்பு காட்டி வருவதாக மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ஜப்பானிய பௌத்த பிக்குகளுடன் ஜனாதிபதி விசேட சந்திப்பு

(கொழும்பு)

சமாதானம் மலர்ந்துள்ள இலங்கையில் முதலீடு செய்வதற்கான சந்தர்ப்பம் ஜப்பான் முதலீட்டாளர்களுக்கு கிடைத்துள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவிக்கின்றார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள ஜப்பானின் விசேட பௌத்த தூதுக் குழுவினருடன் நேற்று முற்பகல் நடைபெற்ற சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

இனங்களுக்கு இடையிலான ஒற்றுமை மற்றும் பொருளாதார மலர்ச்சியால் வலுவான எதிர்கால பயணத்திற்குள் பிரவேசித்துள்ள இலங்கையை, விரைவில் அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்றுவதே தமது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்பட்டு 60 வருடங்கள் பூர்த்தியாகும் இத்தருணத்தில் நீண்டகால நட்புத் தொடர்பாகவும் ஜனாதிபதி நினைவுபடுத்தியதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாம் நீண்டகாலமாக இலங்கைக்கு வருகைதர எதிர்பார்த்திருந்ததாக ஜப்பானின் விசேட பௌத்த தூதுக்குழுவிற்கு தலைமைதாங்கும் காங்கோஜி விகாரையின் விகாராதிபதி சுஜிமுரா தய்சென் தேரர் கூறியுள்ளார். இந்தச் சந்திப்பை அடுத்து அலரி மாளிகை வளாகத்தில் நடப்பட்டுள்ள ஜய ஸ்ரீ மாபோதி முன்பாக தேரர்கள் ஜனாதிபதிக்கும், இலங்கை வாழ் மக்களுக்கும் ஆசி வழங்கினர்.



இலங்கை ஓட்டுக் கூட்டுத்தாபன ஊழியர்கள் சம்பள உயர்வை வேண்டி பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இலங்கை ஓட்டுக் கூட்டுத் தாபனத்தின் முன்னால் பதாகைகளை ஏந்திக் கொண்டு நிற்பதையும் கொடும்பாவி பொம்மையினை கட்டித் தொங்கவிட்டுள்ளதையும் படங்களில் காணலாம்.

# நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகள் செயற்திட்டத்தை எதிர்பார்க்கிறது அமெரிக்கா

(கொழும்பு)

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையை தாம் ஏற்றுக் கொள்கின்ற போதிலும் அதிலுள்ள பரிந்துரைகளை செயற்படுத்துவது தொடர்பான விரிவான செயற்பாட்டுத் திட்டமொன்றை இலங்கை அரசாங்கம் இதுவரை சமர்ப்பிக்கவில்லை என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற நாளாந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதி ஊடகப் பேச்சாளர் மார்க் சீ.டோனர் இதனைக் கூறியுள்ளார்.

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புடைமை தொடர்பாக இலங்கை அரசாங்கத்துடன் தொடர்ந்தும் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையை அமெரிக்கா வரவேற்பதாக இதன் போது அவர் குறிப்பிட்டுள்ளார்.

அது இலங்கைக்குள் இருந்து வெளியான ஒரு ஆவணமாகும் என்பதால், அதன் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டால் உரிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு உறுதுணையாக அமையும் எனவும் டோனர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இலங்கையில் ஜனநாயக நிறுவனங்கள் மற்றும் அவற்றின் பயன்பாடுகள் வலுவடைந்து வருகின்ற போதிலும் விரிவான செயற்பாட்டுத் திட்டமொன்றை இதுவரை இலங்கை அரசாங்கத்திடம் அவதானிக்க முடியவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்குத் தேவையான உறுதியான திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என இலங்கை அரசாங்கத்தினை உற்சாகப்படுத்த வேண்டும் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதி ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். அதேபோன்று நல்லிணக்கத்துடன் தொடர்புடைய முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பிரேரணையொன்றை சமர்ப்பிப்பதற்காக ஜெனீவாவிலுள்ள தமது சகாக்களுடன் இணைந்து செயற்படுவதாகவும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் கூறுகின்றது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைபடுத்தப்படுவதை காண்பதற்கு ஆவல் கொண்டுள்ளதாக குறிப்பிட்ட டோனர் அவை நல்லிணக்கத்திற்கு வித்திடுவதாக அமையும் எனவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சில விடயங்கள் தொடர்பாக கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு கவனம் செலுத்தாமை கவலைக்குரிய விடயம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# ஓட்டுக் கேட்கப்படும் தொலைபேசிகள்

(கொழும்பு)

இலங்கையின் முக்கிய பிரமுகர்கள் 687 பேரின் தொலைபேசி உரையாடல்கள் பாதுகாப்பு அமைச்சினால் ஒட்டுக் கேட்கப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான மங்கள சமரவீர குற்றஞ் சாட்டியுள்ளார்.

இவற்றில் 124 தொலைபேசிகள் அமைச்சர்கள், எம்பிக்களுக்கு உரியது எனவும் அவர் தெரிவித்துள்ளார். மதத் தலைவர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், ஊடகவியலாளர்களின் தொலைபேசிகளும் இவ்வாறு ஒட்டுக் கேட்கப்படுகின்றன. இவ்வாறு தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக் கேட்கப்படுவது மிக மோசமான செயல் எனவும் மங்கள சமரவீர குற்றஞ்சாட்டினார்.

## ஸ்பெயின் வங்கி நிதியுதவி

வெயாங்கொட பிரதான ரயில கடவைக்கு மேலாக மேம்பாலம் ஒன்றை அமைக்க ஸ்பெயின் வங்கியொன்றிடம் நிதியுதவி பெற அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. நிதித் திட்டமிடல் அமைச்சுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழங்கிய ஆலோசனையின் பேரில் இந்த மேம்பாலம் அமைககப்படவுள்ளது. மலையகம் வடக்கு மற்றும் கிழக்கிற்கான பிரதான ரயில் பாதை வெயாங்கொட வழியாகப் பயணிக்கிறது.

வெயங்கொட ரயில் கடவையால் கட்டுநாயக்க செல்லும் பீ.-208 வீதியில் பாரிய போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு 11.23 மில்லியன் யூரோ செலவில் மேம்பாலம் அமைக்கப்படவுள்ளது.

# பொன்சேகாவை ஜெனீவாவுக்கு அனுப்பினால் அரசு மீதான போர்க் குற்றம் வலுவிழக்கும்

## முன்னாள் பிரதம நீதியரசரின் ஆலோசனை

(கொழும்பு)

அரசின் மீதான போர்க் குற்றத்தை வலுவிழக்கச் செய்ய வேண்டுமாயின் சரத் பொன்சேகாவை ஜெனீவா மாநாட்டுக்கு அனுப்பி வைக்கவேண்டும். ஜெனீவா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெறுமாயின் அதனை எதிர்கொள்வதற்காக அனுப்பி வைக்கப்பட வேண்டிய சிறந்த நபர் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தெரிவிக்கின்றார். காலி நகர மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தொழில்சார் புத்திஜீவிகளுடனான சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே முன்னாள் பிரதம நீதியரசர் இந்தக் கருத்தினைக் கூறியுள்ளார்.

பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி ஜெனீவா நகரில் ஆரம்பமாகவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரின் போது இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச மட்டத்தில் விசாரணை நடத்தப்பட வேண்டும் எனக் கோரி, இலங்கைக்கு எதிராக அமெரிக்கா பிரேரணை சமர்ப்பிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அதனை எதிர்கொள்ள பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நான்கு அமைச்சர்கள் உட்பட 52 பேர் அடங்கிய குழுவொன்று ஜெனீவா செல்வதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்ததாக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா இதன் போது தெரிவித்தார்.

போருக்கு தலைமை தாங்கிய சரத் பொன்சேகாவையே, அங்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய சிறந்த நபராக தாம் கருவதுவதாக அவர் கூறினார். சரத் பொன்சேகா நல்லூர் கோவிலில் மேற்சட்டையின்றி இருந்தபோது அவரின் உடலில காயங்கள் இருந்ததை அவதானிக்க முடிந்ததாக கூறிய முன்னாள் பிரதம நீதியரசர், இத்தகைய கொடூரமான நபர்களுடனேயே தாம் போர் புரிந்த தாகவும், தன்னை கொலை செய்ய மூன்று முறை குண்டுத் தாக்குதல் மேற்கொண்டனர் எனவும் பொன் சேகாவால் எடுத்துக் கூற முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு சரத் பொன்சேகா அங்கு குறிப்பிடுவாராயின் போர்க் குற்றம் ஓரளவு வலுவிழக்கும் என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா தெரிவித்தார்.

சர்வதேச மட்டத்தில் சட்டத்தின் இறையாண்மை செயற்படுத்தப்படுவதாகவும் அதனை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும் முன்னாள் பிரதம நீதியரசர் மேலும் கூறினார்.

## எஜமானைக் கொலைசெய்த இலங்கைப் பணிப் பெண்

(கொழும்பு)

இலங்கைப் பணிப்பெண் ஒருவர் தான் வேலை செய்யும் லெபனானிலுள்ள வீட்டின் உரிமையாளரைக் கத்தியால் குத்திக் கொலை செய்துள்ளார். தனது எஜமானாரை முதலில் பூச்சாடியால் தாக்கி கீழே விழவைத்த பின்னர் அவரைக் கத்தியால் குத்திக் கொன்றுள்ளார் எனத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

67 வயதான லெபனானியரே இவ்வாறு இலங்கைப் பெண்ணால் படுகொலை செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டுள்ள அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார்.

# ஜெனீவாவில் இலங்கைத் தூதுக்குழுவினர் பன்னாட்டு இராஜ தந்திரிகளுடன் பேச்சு

ஜெனீவாக் கூட்டத் தொடரில் கலந்துகொள்வதற்காகச் சென்ற இலங்கை அரசின் தூதுக் குழுவினர் அங்கு குழு நிலையிலான கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளனர். இறுதிக் கட்ட யுத்தத்தின்போது மீட்புப் பணியில் ஈடுபட்ட படையினர் மேற்கொண்டதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் அரச தரப்பின் நியாயங்கள் தொடர்பாக பன்னாட்டு இராஜதந்திரிகளுக்கு குழுநிலையில் விளக்கமளித்து வருகின்றனர். ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைகள் தொடர்பான 19 ஆவது மாநாடு எதிர்வரும் 27ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதில் இலங்கையின் மனிதவுரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க உள்ளிட்டோர் கலந்து கொண்டுள்ளதாக பதில் ஊடகத்துறை அமைச்சரும், பொருளாதார பிரதியமைச்சருமான லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார். இதனிடையே, இலங்கை தூதுக்குழுவினர், ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் தலைவரையும் சந்தித்ததாக பிரதியமைச்சர் குறிப்பிட்டார்.

# இறுதி யுத்தத்தில் மக்களின் உயிரிழப்பு

## அரசு வெளியிடும் தகவல்களில் முரண்பாடு

(கொழும்பு)

வன்னியில் நடந்த புலிகளுடனான இறுதிக்கட்ட யுத்தத்தின்போது ஏற்பட்ட மரணங்கள் தொடர்பாக முரண்பாடான புள்ளி விபரத் தகவல்களை அரசு வெளியிட்டுள்ளது.

புள்ளி விபரத் திணைக்களத்தை மேற்கோள்காட்டி வெளியிடப்பட்டிருக்கும் இந்தத் தகவல்களின்படி சுமார் 9000 பேர் மரணமடைந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. எனினும் இவர்களின் மரணத்துக்கான நேரடிக் காரணம் படையினரின் தாக்குதல்தான் என்று கூறப்படவில்லை. புள்ளிவிபரத் திரட்டுக்களில் மரணத்துக்கான காரணம் மிகவும் நாசுக்காக மறைக்கப்பட்டிருக்கிறது. இதனால் சர்ச்சைகள் எழுந்துள்ளன.

அரசாங்கப் புள்ளி விபரங்களின் அடிப்படையில், மூன்று வருடங்களுக்கு முன்னர் வன்னியில் நடந்த போரின் இறுதிக் கட்டத்தில் போர்ப் பகுதியில் 9000 மக்கள் இறந்ததாக தகவல்கள் வெளியாகியிருக்கிறது. இவற்றில் 7000 இற்கும் அதிகமான மரணங்கள் நேரடியாக இராணுவ மோதல்களுடன் தொடர்புபட்டவையாகும்.

இந்த அளவுக்கு அங்கு அழிவு ஏற்பட்டிருக்கிறது என்பதை அறியத்தரும் முதலாவது அரசாங்க புள்ளிவிபரம் இதுவாகும். இந்த விவகாரம் தொடர்பாக பல வெளிநாட்டு விமர்சகர்கள் அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சித்துள்ளனர். இந்த எண்ணிக்கை இதனைவிடப் பல மடங்கு அதிகம் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். கடந்த சில நாட்களில் அரசாங்கம் தனது மக்கள் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. வடக்கில உள்ள மக்களை அந்தத் திணைக்களத்தின் அதிகாரிகள் செவ்வி கண்டு இந்தத் தகவல்களை வெளியிட்டிருந்தனர்.

இந்த மரணங்களின் புள்ளி விபரம் மிகவும் பிரச்சினையை ஏற்படுத்தக் கூடியவை. அந்த அறிக்கையின்படி, 2009 ஆம் ஆண்டின் முதல் 5 மாதங்களில் - அதாவது போரின் இறுதி நாட்களில்- 7400 பேர் 'பிற' என்று கூறப்படும் காரணத்தினால் இறந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது அங்கு அவர்களது இறப்புக்கான காரணம் கூறப்படவில்லை. அதன் அர்த்தம் என்னவென்றால் அவர்கள் இயற்கையாகவோ, விபத்திலோ, தற்கொலை செய்தோ அல்லது தனிப்பட்ட கொலை செய்தோ இறக்கவில்லை. ஆகவே அவர்கள் மோதலினால் இறந்திருக்கலாம். இறுதிப் போரின் இரத்தக் களரி இடம்பெற்ற முல்லைத்தீவிலேயே இவர்களில் பெரும்பாலானவர்கள் இறந்திருக்கிறார்கள்.

மேலும் 2009 ஆண்டு முழுவதிலுமாக 2600 இற்கும் அதிகமானோர் காணாமல் போயிருக்கிறார்கள். இந்த இறந்தவர்கள் அனைவரும் பொதுமக்களா அல்லது விடுதலைப்புலிகளா அல்லது அவர்களது இறப்புக்கு யார் பொறுப்பு என்பது தெளிவாகத் தெரியவில்லை. முதலில் தாம் பொதுமக்கள் எவரையும் கொல்லவில்லை என்று கூறிய இலங்கை அரசாங்கம், பின்னர் அண்மையில் சில பொதுமக்களைத் தமது தரப்பு கொன்றிருக்கலாம் என்று ஒப்புக்கொண்டது டன் இது ஒத்துப்போகிறது. ஐ.நா. ஆரம்பத்தில் கணித்த எண்ணிக்கையுடன் இந்த இறந்தவர்களின எண்ணிக்கை ஒத்துப்போகிறது. ஆனால் பான் கீ மூனால் அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையில் கூறப்பட்ட 40000 பேர் வரை இறந்திருக்கலாம் என்ற கூறப்பட்டதில் இருந்து இந்த எண்ணிக்கை மிகவும் குறைவாகும்.

# இலங்கைக்கு எதிரான தீர்மானம்; நோர்வேயும் ஆதரிக்கும்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராகநிறைவேற்றப்பட உள்ள தீர்மானத்திற்கு நோர்வே ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளது. இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இடம் பெற்ற பொதுமக்கள் இழப்புக்கள் குறித்து சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென நோர்வே மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்க தலைமையிலான சில நாடுகள் எதிர்வரும் ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்ற முனைப்புக் காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தமது அன்பிற்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதனை அறிந்து கொள்வதற்காக பலர் காத்திருப்பதாக நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார். இலங்கை அரசாங்கம் யுத்தத்தை வென்றுள்ளது எனவும், தற்போது சமாதானத்தை வென்றெடுக்க வேண்டிய கடமை இலங்கை அரசுக்கு இருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.



பாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் கல்வி கற்கும் 5 ஆம் ஆண்டு மாணவர்களினால் மேற்கொள்ளப்பட்ட சந்தை விற்பனை நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை காலை நடைபெற்றபோது, அதிபரும், ஆசிரியரும், பெற்றோர்களும் மாணவர்களிடமிருந்து பொருட்களைப் பெற்றுக்கொள்ளுவதைக் காணலாம். (105)

# மீனவர் சுட்டுக்கொலை ஆயர்கள் சங்கம் கண்டனம்

எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது, அந்தனி பெர்ணான்டோ என்ற இளைஞர் கொல்லப்பட்ட சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதாக இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இந்த மரணம் தொடர்பில் ஆயர்கள் சபை கடும் கவலையைத் தெரிவித்து கொள்வதாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள கத்தோலிக்க ஆயர்கள் சபையின் பொதுச் செயலாளர் நோபேட் அன்ராடி ஆண்டகை தெரிவித்துள்ளார். மதிப்பிட முடியாத உயிர்கள் எந்த உணர்வுகளுமின்றி, கொலை செய்யப்படும் சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாதவாறு பார்த்து கொள்வது ஆட்சியாளர்களின் பொறுப்பு எனவும் அவர் கூறியுள்ளார்.

# தாதியர்கள் கோரிக்கை நிறைவேற்றம்; கைவிடப்பட்டது தொழிற்சங்கப் போராட்டம்

(கொழும்பு)

அரச்ாங்க சுகாதாரச் சேவையில் கடமையாற்றும் தாதியரின் சகல கோரிக்கைகளை நிறைவேற்ற அரசாங்கம் இணங்கி உள்ளதால் தாதியர் சங்கம் மேற்கொள்ள இருந்த தொழிற்சங்க நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளது. தாதியரின் சகல கோரிக்கைகளை நிறைவேற்ற சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுத்துள்ளார். இதன் காரணமாக பொதுச் சேவைகள் தாதியர் சங்கத்தினர் மார்ச் மாதம் 2ஆம் திகதி மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்த தொழிற சங்க நடவடிக்கைகளையும் கைவிட்டுள்ளனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நிதியமைச்சு மற்றும் பொது நிர்வாக அமைச்சு என்பவற்றின் செயலாளர்கள் சம்பளம் மற்றும் ஊழியர் எண்ணிக்கை குழுவின் அதிகாரிகள் ஆகியோர் கூடி தாதியரின் கோரிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்தனர். இந்தக் கூட்டத்தின் போதே தாதியரின் கோரிக்கைகளை தீர்த்து வைப்பதற்காக முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன என்று அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதனைப் பொதுச் சேவைகள ஐக்கிய தாதியர் சங்கத்தின் தலைவர் முருத்தெட்டுவ ஆனந்த தேரரும் உறுதிப்படுத்தியுள்ளார். தாதியரின் சீருடைக்காகத் தற்போது வருடத்திற்கு 8 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. இது 13 ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. தாதியர் விரிவுரையாளர்களுக்கு மாதாந்தம் 10 ஆயிரம் ரூபாபடி கற்பித்தல் கொடுப்பனவு, விசேட தர தாதி அதிகாரிகளுக்கு இரண்டாயிரம் ரூபா படித் தொலைபேசி கொடுப்பனவு வழங்கவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதேவேளை மேலதிக வேலை நேரக் கொடுப்பனவுக்குப் பதிலாக கட்டண முறைப்படி மேலதிக நேரக்கொடுப்பனவுத் திட்டத்தை மூன்று மாதங்களுக்குள் நடைமுறைப்படுத்தவும் தாதியர் யாப்பைச் செயற்படுத்துவதற்கு அடிப்படையான விதிகளை உள்ளடக்கிய சுற்றறிக்கையை வெளியிடுவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது. இதேவேளை அறுபது வயதைக் கடந்த பின்னர் 63 வயது வரையும் தாதியர் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்ற அனுமதி வழங்குவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# நீதிமன்ற நியாயாதிக்க சிக்கலை ஆராய விசேட குழு நியமனம்

(கொழும்பு)

நீதிமன்ற நியாயாதிக்கம் தொடர்பாக எழுந்துள்ள சிக்கல்களை ஆராய்வதற்காக விசேட குழுவொன்றினை நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் நியமித்துள்ளார்.

உயர் நீதிமன்ற நீதியரசர் காமினி அமரதுங்கவை தலைவராகக் கொண்ட இக்குழுவில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் ஜயந்த பதிரண மற்றும் நீதி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் பியுமந்தி பீரிஸ் ஆகியோர் உறுப்பினராக உள்ளனர்.

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க மற்றும் இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சிப்லி அஸீஸ் ஆகியோருடன் கலந்தாலோசித்த பின்னரே நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் இக்குழுவை நியமித்துள்ளார். நீதிமன்ற நியாயாதிக்கங்கள் சம்பந்தமாக எழுந்துள்ள சிக்கல்கள் தொடர்பில் பிரதேச் சட்டத்தரணிகள் சங்கங்களினால் முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் குறித்து இக்குழு கூடி விசாரணை செய்யவுள்ளது.

# யாழ்.பல்கலையில் ஓவியக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

இரவீந்திரநாத்தாகூரின் ஓவியக் கண்காட்சி எதிர்வரும் 27, 28, 29 ஆம் திகதிகளில் யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவிருக்கின்றன.

யாழ்.இந்தியத் துணைத் தூதரகத்தின் அனுசரணையில் நடைபெறும் இந்நிகழ்வில் இரவீந்திர நாத்தாகூரின் 45 ஓவியங்களில் டிஜிற்றல் பதிப்புகளின் காட்சி ஒன்றினையும் யாழ்.பல்கலைக்கழம் கலையும் வடிமைப்பும் அலகு ஏற்பாடு செய்துள்ளது.

வங்கக் கவிஞரான இரவீந்திர நாத்தாகூரின் ஓவிய முயற்சிகளும் அவர் உருவாக்கிய சாந்தினிகேதன் என்ற பல்கலைக்கழகமும் இந்தியாவில் மட்டுமல்ல தென்னாசியா முழுவதும் நவீன ஓவிய இயக்கங்கள் தோற்ற வழி வகுத்தன.

இதில் இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் பிரதம விருந்தினராகவும், கலைப் பீடாதிபதி பேராசிரியர் நா.ஞானகுமாரன் சிறப்பு விருந்தினராகவும் வருகை தரவுள்ளார்கள்.

நாளை மாலை 3 மணிக்கு பிரதம விருந்தினரால் திறந்து வைக்கப்பட்டு 28, 29 ஆம் திகதியில் காலை 10 முதல மாலை 4 மணிவரை மக்களின் பார்வைக்காகத் திறந்து வைக்கப்படும். சித்திரம் கற்கும் பாடசாலை மாணவர்களுக்கு இது ஓர் வரப்பிரசாதமாகும். (105)

# திருட்டு மின்சாரம்; தடுக்க நடவடிக்கை

(கொழும்பு)

சட்டவிரோதமாக மின்சார இணைப்பைப் பெற்றிருந்த மேலும் 331 பேருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவிக்கின்றது.

மின்மாணி மோசடி மற்றும் கொக்கி மாட்டுதல் ஆகிய சட்ட விரோத நடவடிக்கைகள் மூலம் மின்சாரத்தைப் பெற்றுக் கொண்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மின்சார மோசடி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகள் மூலம் மின்சாரசபைக்கு சுமார் 215 இலட்சம் ரூபா வருமானம் கிடைத்துள்ளது. இந்தத் தொகையில் சுமார் 36 இலட்சம் ரூபாவை நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் அபராதமாக அறவிட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

# 32 பேருக்குத் தண்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் யாழ்.பொலிஸாரலும் கோப்பாய் பொலிஸாராலும் பரவலாக நேற்றுமுன்தினம் 32 பேர் மீது வழக்குகள் பதிவுசெய்யப்பட்டு அவர்களுக்குத் தண்டம் அறவிடப்பட்டிருப்பதாக யாழ்.நீதவான் நீதிமன்றப் பதிவாளர் வட்டாரங்கள் தெரிவித்தன.


வீதி ஒழுங்கு விதிமுறைகளை மீறியமை, வாகன அனுமதிப் பத்திரமின்மை, காப்புறுதிப் பத்திரமின்மை, வீதிக்கு இடையூறு விளைவித்தமை, மது போதையில் பயணிகளுக்கும் போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்படுத்தியமை போன்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலேயே இந்த 32 பேரின் மீதும் யாழ்.நீதவான் நீதிமன்றில் வழக்குகள் பொலிஸாரால் பதிவு செய்யப்பட்டிருந்தன.

இவ்வழக்குகளை விசாரணை செய்த யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா குற்றவாளிகளுக்கு 500 ரூபா முதல் 10500 ரூபாவுக்கு இடைப்பட்ட தொகைகளைத் தண்டப்பணமாகச் செலுத்தும்படி தீர்ப்பளித்தார். (பா)

படங்கள் : சுரேஸ்




# பொன் அணிகளின் போர்



ஆட்ட நாயகன்

சிறந்த களத்தடுப்பாளர்

சிறந்த இணைப்பாட்டம்



சிறந்த சகல துறை வீரர்

சிறந்த பந்து வீச்சாளர்

சிறந்த துடுப்பாட்ட வீரர்

## ஒன்பது விக்கெட்டுக்களால் சென். பற்றிக்ஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

பொன் அணிகளின் போர் இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி அபார வெற்றிபெற்றது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்குமிடையில் வரலாற்று புகழ்மிக்கதாக இடம்பெற்ற 95ஆவது பொன் அணிகளின் போர் நேற்றைய தினம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நிறைவடைந்தது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி முதலாவது இனிங்ஸில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 95 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்தது. எனினும் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர்களின் பந்து வீச்சுக்கு ஈடு கொடுக்க முடியாத யாழ்ப்பாணக் கல்லூரி அணி ஏனைய நான்கு விக்கெட்டுக்களையும் 17 ஓட்டங்களுக்குள் இழந்தது. இறுதி யில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கஜேந்திரன் 29, மதுசன் 28, நிமலேந்திரா 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லிவிங்ரன் 12 ஓவர்கள் பந்து வீசி ஆறு ஓட்டமற்ற ஓவர் அடங்கலாக 18 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். மற்றும் நோபேட் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

114 ஓட்டங்கள் பின்னிலையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி இருந்தமையால் மீண்டும் துடுப்பாடப் பணிக்கப்பட்டது. இந்நிலையில் இராண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி ஒரு புறம் விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டபோதும் மறுபுறத்தில் மதுஷன் சிறப்பான அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியைக் கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றார்.

இறுதியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றது. இதில் 109 பந்துகளை எதிர்கொண்ட மதுஷன் நான்கு சிக்ஸர்கள், எட்டு பவுண்டரிகள் அடங்கலாக 94 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் நிமலேந்திரா 25 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் அஜித் டர்வின் 14 ஓவர்கள் பந்து வீசி 39 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். மற்றும் நோபேட், நிதர்சன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 21 ஓவர்களில் 64 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 15.1 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் ஆட்டமிழக்காது ரியூடர் 30, குகபாலா 28 ஓட்டங்களைப் பெற்றனர். வீழ்த்தப்பட்ட விக்கெட்டை நிமலேந்திரா வீழ்த்தினார். இதன் மூலம் ஒன்பது விக்கெட்டுக்களால் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக சென். பற்றிக்ஸ் கல்லூரி வீரர் அஜித் டர்வினும், சிறந்த துடுப்பாட்ட வீரராக யாழ்ப்பாணக் கல்லூரி அணியைச் சேர்ந்த மதுக்ஷனும், சிறந்த பந்து வீச்சாளராக சென். பற்றிக்ஸ் லிவிங்ரனும், சிறந்த களத்தடுப்பாளராக சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியைச் சேர்ந்த ஆர். நிதர்சனும், சிறந்த சகலதுறை வீரராக சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியைச் சேர்ந்த நோபேட்டும், சிறந்த இணைப்பாட்ட ஜோடியாக சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியைச் சேர்ந்த ஜக்ஷன், ரியூடர் இணையும் தெரிவு செய்யப்பட்டது.

இப்போட்டி நிகழ்வில் இரு கல்லூரிகளைச் சேர்ந்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், ஆதரவாளர்கள் மற்றும் வர்த்தக நிறுவன பிரமுகர்கள், ரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



## முதல் இனிங்ஸ் பின்னடைவே தோல்விக்கான காரணம்



(யாழ்ப்பாணம்)

முதல் இனிங்ஸில் சிறப்பாகச் செயற்படாததே தோல்விக்குக் காரணமென வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியின் பயிற்றுநர் ஆர். குகன் தெரிவித்தார்.

பொன் அணிகளின் போர் இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியில் வட்டுக் ஷகோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி தோல்வியடைந்தமை குறித்து எமது செய்தியாளருக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இரண்டாவது இனிங்ஸில் எமது வீரர்கள் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்தினர். குறிப்பாக மதுஷன் சிறப்பான முறையில் ஆடி 94 ஓட்டங்களைப் பெற்றார். அவர் சதத்தை தவறவிட்டமை துரதிஷ்டமானது. ஒருபுறம் விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்டபோதும் அவர் சிறப்பான முறையில் போராடினார்.

இது போன்று முதல் இனிங்ஸிலும் சிறப்பாக ஆடியிருந்தால் பொலோஒன்னைத் தவிர்த்திருக்க முடியும்.

எனவே, முதல் இனிங்ஸில் ஏற்பட்ட பின்னடைவே எமது தோல்விக்குக் காரணமாக அமைந்தது. அடுத்து வரும் ஒரு நாள் போட்டியில் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்தி வெற்றிக்குப் போராடுவோம் எனவும் அவர் தெரிவித்தார்.

## இணைப்பாட்ட சந்தர்ப்பம் வழங்கப்படாததால் வெற்றி



(யாழ்ப்பாணம்)

எமது வீரர்கள் போட்டியின் ஆரம்பம் முதல் இறுதி நாள் வரை சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்தி வந்தமையே நாம் வெற்றிபெறக் காரணம் என சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியின் பயிற்றுநர் எஸ். நிசாந்தன் தெரிவித்தார்.

பொன் அணிகளின் போர் இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றமை குறித்து எமது செய்தியாளருக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், பெரிய போட்டி என வர்ணிக்கப்படுகின்ற இந்தப் போட்டியில் நாங்கள் வெற்றிபெற்றிருப்பது மகிழ்ச்சி. இதற்கு எமது வீரர்களின் சிறப்பான ஆட்டத்திறனே காரணம். அவர்கள் போட்டியின் ஆரம்பம் முதலே தமது திறமைகளை வெளிப்படுத்தி வந்தனர். பந்து வீச்சாளர் சிறப்பான முறையில் செயற்பட்டனர். குறிப்பாக, இணைப்பாட்டம் ஒன்றை எதிரணி பெற்றுக் கொள்ள முடியாத வகையில் எமது பந்து வீச்சாளர்கள் செயற்பட்டனர். இதில் லிவிங்ரன், அஜித் டர்வின் ஆகியோர் சிறப்பாகச் செயற்பட்டனர். ஒட்டுமொத்தத்தில் ஒரு அணியாக இணைந்து ஒருங்கிணைந்த ஆட்டத்தை வெளிப்படுத்தியன் மூலம் நாம் இலகுவாக வெற்றிபெற முடிந்தது எனவும் அவர் தெரிவித்தார்.

# உடுவில் பிரதேச செயலக அணி கரப்பந்தாட்ட சம்பியன்

(உடுவில்)

உடுவில் பிரதேச கரப்பந் தாட்டப் போட்டி இணுவில் பொது விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் மைதானத்தில் ஆதிக்கம் செலுத்திய உடுவில் மத்திய விளையாட்டுக் கழகம் முதல் சுற்றை 25 : 22 எனற அடிப்படையில் பெற்றது.

இரண்டாம் சுற்றில் இணுவில் சிந்து விளையாட்டுக் கழகத்தின் களநிலைமை சாதகமாக இருந்தமையால் 2 ஆம் சுற்றை 25:23 என்ற அடிப் படையில் வெற்றி பெற்றது.

எனினும் உடுவில் மத்திய கழக மைதானத்தில் ஆதிக்கம் செலுத்தி 25 : 17 என்ற அடிப் படையில் உடுவில் பிரதேச செயலக அணி சம்பியன் ஆனது. (93)

# உதை பந்தாட்ட சுற்றுப் போட்டி

(இணுவில்)

இணுவில் கலாநிதி சன சமூக நிலைய 53ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டா டும் வகையில் 2ஆம் மட்ட அணிகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி கலாஜோதி விளையாட்டு மைதானத்தில் நடத்தப்படு கின்றது. அணிக்கு 7 வீரர்கள் பங்கு பற்றும் இந்தப் போட்டி யில் 24 கழகங்கள் மோது கின்றன. (120)

# வடமராட்சி வலய பூப்பந்தாட்ட முடிவுகள்

(வடமராட்சி)

வடமராட்சி கல்வி வலையப் பூப்பந்தாட்டப்போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள் ளன. அவற்றின் விபரங்கள் வருமாறு:

**15 வயதுப் பிரிவு (ஆண்)**

முதலாமிடம் - நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், இரண்டாமிடம் - தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியால யம்.

**15 வயதுப் பிரிவு (பெண்)**

முதலாமிடம் - மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, இரண்டா மிடம் - உடுப்பிட்டி மகளிர் கல் லூரி, மூன்றாமிடம் - வல்வை மகளிர் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு (ஆண்)**

முதலாமிடம் - பருத்தித் துறை ஹாட்லிக் கல்லூரி, இரண்டாமிடம் - நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், மூன்றாமிடம் - கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு (பெண்)**

முதலாமிடம் - மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, இரண்டா மிடம் - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, மூன்றாமிடம் - வட இந்து மகளிர் கல்லூரி. (93)



காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் க்காரைநகர் பிரதேச விளையாட்டு பேரவையினால் நடாத்தப்பட்ட கழகங்களுக்கான விளை யாட்டு விழாவில் பேரவையின் தலைவரும் காரைநகர் பிரதேச செயலருமான திருமதி தேவநந்தினி பாபு வெற்றிக் கேடயத்தை வழங்கு வதையும், யு.என்.டி.பி. சமூக வலுவூட்டல் உத்தியோகத்தர் வெற்றி பெற்ற ஒருவருக்கு பரிசில் வழங்கு வதையும் காணலாம். (50)

# பெண்கள் துடுப்பாட்டம் மெதடிஸ் சம்பியன்

(வடமராட்சி)

வடமராட்சி கல்வி வலய 19 வயதுப் பிரிவு பெண்கள் துடுப்பாட்டப்போட்டி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் சம்பியன் பட்டத்தை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி பெற்றுக்கொண்டது. (93)

# மென்பந்து சுற்றுப்போட்டி யூனியன் கல்லூரி சம்பியன்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை கல்விக் கோட்டம் மென்பந்து சுற்றுப்போட்டி மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெற்றது. இதில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அளவெட்டி அருணோதயாக் கலலூரியை எதிர்த்து விளையாடி சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றது. (93)

*காரைநகர் ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியால யத்தில் வருடாந்த இல்ல மெய்வல்லுர் போட்டி கடந்த 11ஆம் திகதி பாடசாலை அதிபர் சிவானந்தராஜா தலைமையில் இடம் பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினர் களாக இலங்கை வங்கி ஸ்ரான்லிறோட் கிளையின் உதவி முகாமையாளர் பி.சிவபாலன் சிறப்பு விருந்தின ராக காரைநகர் ஈ.பி.டி.பி அமைப்பாளர், காரைநகர் பிரதேசசபை எதிரக்கட்சி தலை வருமான கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டு அணி வகுப்பு மரியாதையை ஏற்பதைக் காணலாம்.*




# சச்சினின் இடத்தை நிரப்ப முடியாது

சமீப காலமாக ஓட்டங்கள் சேர்க்கத் திணறி வரும் சச்சின் டெண்டுல்கர், ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து வெளியேறிவிடலாம் என்று கபில் தேவ் கருத்து தெரிவித்திருந்த நிலையில், வெங்சர்க்கார் அதற்கு மாறாகக் கருத்து வெளியிட்டுள்ளார்.

சச்சினின் இடத்தை எந்த வீரராலும் நிரப்ப முடியாது என்று கூறியுள்ள வெங்சர்க்கார், மாஸ்டர் துடுப்பாட்ட வீரர் சச்சினுக்கு ஓய்வு பெறும் விவகாரத்தில் எவரது ஆலோசனையும் தேவையில்லை என்று கூறியுள்ளார்.



இந்த விவகாரத்தில் எவரும் அவருக்கு ஆலோசனை கூறத் தேவையில்லை. சரியான நேரம் வரும்போது அவர் தனது திறமையை வெளிப்படுத்து வார் என்றார் அவர்.

முன்னதாக கபில் தேவ் கூறும் போது -

உலகக் கோப்பை வெற்றி பெற்ற உட னேயே புகழின் வெளிச் சத்தில் இருந்த போதே சச்சின் தாமாக முன் வந்து ஓய்வுபெற்றி ருகக வேண்டும் ஆனால, இது அவருடைய சுதந் திரம்! என்று கருத்து தெரிவித்திருந்தமை குறிப் பிடத்தக்கது.

# டோனியின் கட்டுப்பாட்டில் சிரேஷ்ட வீரர்கள் இல்லை!

இந்திய அணியின் தலைவர் டோனியின் கட்டுப்பாட்டில் சிரேஷ்ட வீரர்கள் இல்லை என்று பாகிஸ்தான் முன்னாள் தலைவரும், வர்ணனை யாளருமான வாசிம் அக்ரம் தெரிவித் துள்ளார்.



டோனி மிகச் சிறந்த புத்திசாலித் தனமான வீரர் என்பது எனது கருத் தாகும். இந்திய அணியின் மூத்த வீரர்கள் குறித்து அவர் தெரிவித்த கருத்துக்களின் பின்னணியில் சரியான காரணம் இருக்கும். இதற்கு முன்பு அவர் இது போன்ற கருத்துக்களை கூறியதாக நான் கேட்டது இல்லை. டோனியின் கட்டுப் பாட்டில் சிரேஷ்ட வீரர்கள் இல்லை.

அவரது கட்டுப்பாட்டை மீறி இருக்கலாம் அல்லது சுமையாக இருந்து இருக் கலாம் என்று கருதுகிறேன். டெண்டுல்கர், ஷோவாக்கும் நல்ல உடல் தகுதியுடன் உள்ளனர். ஒரு நாள் போட்டிக்கு அவர்கள் ஏற்றவர்கள் தான். அவுஸ்ரேலிய மைதானங்கள் பெரியது.

நல்ல நிலையில் இருந்தால்தான் அங்கு ஆட முடியும் டெண்டுல்கரின் உடல் தகுதி குறித்து யாரும் கேள்வி எழுப்ப இயலாது என்றார்.

# ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் ஓராண்டு காத்திருந்த விண்ணப்பம்



கடந்த 2005 இல் ஸ்பெக்ட்ரம் உரிமங்கள் கோரி தாக்கல் செய்யப் பட்ட 24 விண் ணப்பங்கள் மீது, அப்போது தொலைத் தொடர்புத்துறை அமைச்சராக இருந்த தயாநிதி எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. விண்ணப்பங்களை ஓராண்டாக கிடப்பில் போட்டிருந்தார் என நாடாளுமன்றக் கூட்டுக்குழு முன் தொலைத் தொடர்புத்துறை முன்னாள் செயலர் தெரிவித்தார்.

இருப்பினும், விண்ணப்பங்களை தயாநிதி ஏன் கிடப்பில் போட்டார் எனற கேள்வியை பா.ஜ. - அ.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் எதுவுமே எழுப்பவில்லை.

ஸ்பெக்ட்ரம் ஊழல் குறித்து, காங்கிரஸ் மூத்த தலைவரான பி.சி.சாக்கோ தலைமையிலான, நாடாளுமன்ற கூட்டுக்குழு விசாரணை நடத்தி வருகிறது. இந்தக் குழுவின் கூட்டம், கடந்த புதன்கிழமை நடந்தது. அப்போது, தொலைத்தொடர்புத் துறையின் முன்னாள் செயலர் ஜே.எஸ்.சர்மா ஆஜராகி வாக்குமூலம் அளித்தார்.

அவர் கூறியதாகச் சொல்லப்படுவதாவது, ஸ்பெக்ட்ரம் உரிமங்கள் ஒதுக்கீடு மற்றும் அவற்றின் விலை கள் நிர்ணயம் குறித்து முடிவு செய்ய, பிரணாப் முகர்ஜி தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு என்பது தொலைத் தொடர்பு அமைச்சகம் சார்ந்தது என்றாலும், பிரணாப் தலைமையிலான மூத்த அமைச்சர்கள் குழு தான் எல்லாவற்றையும் முடிவு செய்யும் என தீர்மானிக்கப்பட்டது. ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு தொடர்பாக ஆரமபத்தில் இப்படித்தான் முடிவெடுக்கப்பட்டது.

கடந்த 2005 இல நிலைமை இவ்வாறு இருந்தாலும், 2006 இல் மாறியது. அப்போது, தொலைத்தொடர் புத்துறை அமைச்சராக இருந்த தயாநிதி, ஸ்பெக்ட்ரம் விலை நிர்ணயம் தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு கடிதம் எழுதினார். அதில், ஸ்பெக்ட்ரம் உரிமம் மற்றும் விலை நிர்ணயம் போன்றவை அனைத்தும், தொலைத் தொடர்பு இலாகாவிற்குள் மட்டுமே வர வேண்டும். இந்த விஷயங்களை ஆராய்வதற்கு, மூத்த அமைச்சர்கள் குழு அவசியம் இல்லை என்றார். இதை பிரதமர் ஏற்றுக்கொண்டதால், ஸ்பெக்ட்ரம் விலை நிர்ணயம் மறறும் ஒதுக்கீடுகள் குறித்த விஷயங்கள் அனைத்தும், மூத்த அமைச்சர்களின் அதிகார வரம்பில் இருந்து எடுக்கப்பட்டது. இவ்வாறு சர்மா தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

# இந்திய - அமெரிக்க இராணுவம் ராஜஸ்தானில் கூட்டுப்பயிற்சி

(ஜெய்ப்பூர்)



இந்தியா-அமெரிக்கா நாடுகளுக்கு இடையேயான இராணுவ கூட்டுப்பயிற்சி வரும் மார்ச் மாதம் முதல்வாரத்தில் நடைபெறவுள்ளது. இது குறித்து இந்திய பாதுகாப்புத்துறை செய்தி தொடர்பாளர் கோஸ்வாமி கூறியதாவது,

ராஜஸ்தான் மாநிலம் பிகானீர் பகுதியில் மார்ச் மாதம் முதல் வாரத்தில் நடைபெற உள்ள இந்தப் பயிற்சிக்கு "யூத் அபியா" 2011-2012 என பெயரிடப்பட்டுள்ளது. இப் பயிற்சியில் அமெரிக்காவின் 25 ஆவது இன்பேன்ட்ரி படைப் பிரிவினர் கலந்துகொள்கின்றனர்.

இந்தக் கூட்டு பயிற்சி மூலம் இருநாட்டு இராணுவத்தினரிடையே தொழில் நுட்ப மேம்பாடு உட்பட பல்வேறு விஷயங்கள் குறித்து கருத்து பரிமாற்றங்கள் ஏற்படக்கூடும். அதுமட்டுமின்றி வரையறுக் கப்பட்ட செயற்பாட்டுத் திட்டங்களான பாதுகாப்பு உள்ளடக்கிய தகவல் தொடர்பு, உளவுத்துறை சார்ந்த சமாதான அமுலாக்க நடவடிக்கைகள் மற்றும் மீட்புப் பணிகள் போன்றவைகளில் பங்கேற்பாளர்கள் ஈடுபடுவார்கள்.

# முதல்வரை பிரதமராக உயர்த்த அ.தி.மு.க. நூதன திட்டம்

(கோவை)

முதல்வர் ஜெயலலிதாவை நாட்டின் அடுத்த பிரதமர் ஆக உயர்த்தும் நோக்கத்துடன், கோவையை சேர்ந்த அ.தி.மு.க. உறுப்பினர் ராமசுப்ரமணியன் இணையத்தளம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது,

நாட்டை அச்சுறுத்தும் தீவிரவாதத்தை முடக்கி, தொலை நோக்குப் பார்வையுடன், முன்னேற்றத் திட்டங்கள் கொண்ட திறமையான அரசை தரும் ஆறறலும் ஆளுமையும், தமிழக முதலவர் ஜெயலலிதாவுக்கு மட்டுமே உள்ளது. சமீபத்தில் இந்தியா வந்த அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் ஜெயலலிதாவை சந்தித்துச் சென்ற நிகழ்வு இந்த கருத்துக்கு வலுச்சேர்க்கிறது.

ஆகவே, 2014 இல் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில், அவரை பிரதமராக முன்னிருத்தும் நோக்கத்துடன் இணையதளம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

தேசிய மற்றும் சர்வதேச அரங்குகளில், இது குறித்த கருத்து பரிமாற்றத்துக்குத் தேவையான பணிகள், இந்த இணையதளம் மூலம்மேற்கொள் ளப்படவுளளன. இணையத்தளம் மற்றும் கைத்தொலைபேசிகள் வாயிலாக, புதிய தலைமுறை சமுதாயத்தினரை நேரடியாக சென்றடையவும், அவர்களை அ.தி.மு.க.வின் அபிமானிகளாக மாற்றவும் இந்த முயற்சி பயன்படும் என்றார்.

# "ஜனாதிபதி ஆட்சி அமுலாகும்" அமைச்சருக்கு வந்தது அழைப்பாணை


(கான்பூர்)

ஜனாதிபதி ஆட்சி அமுலாகும் என சர்ச்சைக்குரிய வகையில் பேசிய மத்திய அமைச்சர் ஸ்ரீபிரகாஷ் ஜெய்ஸ்வாலுக்கு தேர்தல் குழு அழைப்பாணை அனுப்பியுள்ளது.

உத்தரப் பிரதேச மாநில சட்டசபை தேர்தல் பிரசாரத்துக்காகச் சென்றிருந்த மத்திய சுரங்கத் துறை அமைச்சர் ஸ்ரீபிரகாஷ் ஜெய்ஸ்வால் அங்கு செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது, உத்தரப் பிரதேச தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும். காங்கிரசுக்கு பெரும்பான்மை கிடைக்காவிட்டால், ஜனாதிபதி ஆட்சி அமைவதற்கும் வாய்ப்பு உள்ளது எனறார்.

ஜெய்ஸ்வாலின் இந்த பேச்சு, பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என பா.ஜ. மூத்த தலைவர் அத்வானி உள்ளிட்டோர் வலியுறுத்தினர்.

இதையடுத்து, தான் அவ்வாறு பேசவில்லை என்றும்,



தான் பேசியதை, செய்தியாளர்கள் திரித்து வெளியிட்டு விட்டனர் என்றும் ஜெய்ஸ்வால் கூறினார்.

# வருமானக் கணக்கு விபரங்களை வெளியிட சோனியாகாந்தி மறுப்பு

(புதுடில்லி)

வருமான வரி கணக்கு தாக்கல் அறிக்கை பற்றிய விபரங்களை, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வெளியிட முடியாது என காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி மறுப்புத் தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சென்னையைச் சேர்ந்த தகவல் அறியும் உரிமைச் சட்ட ஆர்வலர் வி.கோபாலகிருஷ்ணன் என்பவர், கடந்த 2001-2011 வரையிலான காலத்தில், காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியாகாந்தி தாக்கல செய்தவருமான வரிக் கணகு, தாக்கல் அறிக்கை பறறிய விபரங்களை தெரிவிகக வேண்டும் எனத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனுத் தாக்கல் செய்திருந்தார். இது பற்றிய விபரங்களை வெளியிட சோனியாகாந்தி மறுத்து விட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

வருமான வரித் துறையினரின் ஆய்வுக்காகவே, கணக்கு தாக்கல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதைப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. இந்தத் தகவல்களை பகிரங்கமாக வெளியிட்டால் அவை தவறாக பயன்படுத்தப்படுவதற்கு வாய்பபு உள்ளது என சோனியா தெரிவித்ததாக தகவல வெளி யாகியுள்ளது. சோனயாவின் இந்த பதிலுக்கு, காங்கிரஸ் கட்சியின் மூதத தலைவர்கள் சிலரும் ஆதரவு தெரிவித்துள்ளதாகவும் காஙகிரஸ் வட்டாரங்கள் தெரிவித துள்ளன.

## கூட்டும் தமிழ்க்கட்சிகளும்....

*(14 ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

மாவை சேனாதிராஜாவும் சுரேஸ் பிரேமச்சந்திர னும் என்று கூறப்படுகிறது.

நாடாளுமன்ற அரசியலுக்குப் புதிய வரானாலும், 'சப்றா' நிதி நிறுவன (மோசடி?) அனுபவமும், 'உதயன்' பத்திரிகை நிறுவன பலமும், பலமான நிதி ஆதாரங்களும் உள்ள கூட்ட மைப்புப் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும் கூட்டமைப்புத் தலைமைப் பதவியை நோக்கி மெல்ல மெல்லக் காயகளை நகர்த்தி வருகிறார் எனச் சிலர் கூறுகின்றனர்.

இந்த நிலையில் கூட்டமைப்பை அதிகார பூர்வமாக தேர்தல் திணைக் களத்தில் பதிவு செய்ய வேண்டும் என்ற பங்காளிக் கட்சிகளின் (இதில் முனைந்து நிற்பவர் சுரேஸ் பிரேமச் சந்திரன்) தொடர் வலியுறுத்தலை புறந்தள்ளிவிட்டு, தமிழரசுக்கட்சி தன்னைப் பலப்படுத்துவதில் முனைந்து நிற்கிறது.

சரவணபவனின் மைத்துனரும், கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது வேட்பாளர் நியமனத்தை எதிரபார்த்து அதை மைத்துனர் சரவணப வன் சாதுரியமாகத் தட்டிப் பறித்து விட, அந்தக் கோபம் காரணமாக அவரை விட்டுப் பிரிந்து சென்றவருமான, சு.வித்தியாதரனை தமிழரசுக்கட்சியின் கொழும்புக் கிளையின் செயலாளராக்கியதின் மூலம், சரவணபவனின் காய்நகர்த்தல்களுக்குத் தடைபோட மாவை சேனாதிராஜா முயன்றுள்ளதாக சிலர் கூறுகின்றனர்.

அத்துடன் வித்தியாதரனை வடக்கு மாகாணசபையின் முத லமைச்சர் வேட்பாள ராக நிறுத்தவும் முயற்சிகள் நடக்கின்றன. இந்த முதலமைச்சர் பதவியில் சரவணபவனுக்கும் ஒரு கண் உண்டு.

தமிழரசுக்கட்சியின் இந்தக் கொழும்புக் கிளை விவகாரம், இன்னொரு பக்கத்தில் மனோ கணேசனை உசுப்பேத்தி விட்டுள்ளது. ஐ.தே.கவின் மடியில் செல்லப்பிள்ளையாக இருந்து கொண்டு, கொழும்பில் வாழ்கின்ற இந்திய வம்சாவழித் தமிழர்களினதும், யாழ்ப்பாணத் தமிழர்களினதும் வாக்குகளைப் பெற்று, 'சர்க்கஸ்' அரசியல் செய்து வரும் மனோகணேசனுக்கு, தமிழரசுக்கட்சி கொழும்பில் கிளை திறந்த விவகாரம் ஆத்திரத்தைக் கிளறிவிட் டுள்ளது.

'கொழும்பில் வாழ்கின்ற தமழர்கள் அனைவரும் எனக்கு சீதனமாக வழங்கப்பட்டவர் கள். அப்படியிருக்க இன்னொரு மாப்பிள்ளையாக எப்படி அங்கு தமிழரசுக்கட்சியை கொண்டு வந்து நிறுத்த முடியும்?' என மனோ கணேசன் காட்டமாக உறுமுகிறார். அது மாத்திரமின்றி, 'நீங்கள் இங்கே வந்தால், நான் அங்கு வந்து காட்டுகிறேன் பார்' என யாழ்ப்பாணத்துக்கும் ஒரு 'விசிட்' அடித்திருக்கிறார. வன்னி மற்றும் கிழக்கிற்கும் செல்லத் திட்டம் தீட்டியிருக்கிறார்.

தமிழ் கட்சிகள் தேசியமும் சுய நிர்ணயமும் பேசிக் கொண்டு உண்மையில் நடத்தும் கூத்துக்கள் இவைதாம் 'குட்டக் குட்ட குனிபவனும் மடையன். குனியக் குனிய குட்டுபவனும் மடையன்' என்றொரு வழக்கு உண்டு. ஆனால் இங்கே குட்டிக் கொண்டிருக்கும் தமிழ் கட்சிகள் மடையர்கள் அல்ல., தொடர்ந்து எவ்வித பிரக்ஞையும் இல்லாமல் குனிந்து கொண்டிருக்கும் தமிழ் பொது மக்களே மடையர்களாக்கப்படுகிறார்கள்!

## தவக்காலச் சிந்தனை



### நோன்பிருப்பது எப்படி?

பிறருக்குத் தீர்ப்பிடுவதைத் தவிருங்கள் அவர்களில் வாசம் செய்யும் இயேசுவில் மகிழுங்கள்.

வெளிப்படையான இருளைத் தவிருங்கள், உண்மை ஒளியில் மகிழுங்கள்.

தோல்வி மனப்பான்மையைத் தவிருங்கள், நல்லார்வ நலத்தில் மகிழுங்கள்.

நோய்பற்றிய சிந்தனைகளைத் தவிருங்கள், இறைவனது குணமாக்கும் வல்லமையில் மகிழுங்கள்.

மாசுபடுத்தும் வார்த்தைகளைத் தவிருங்கள், தூய்மையாக்கும் வார்த்தைகளில் மகிழுங்கள்.

கோபத்தைத் தவிருங்கள், பொறுமையில் மகிழுங்கள்.

கவலையைத் தவிருங்கள், இறைவனது பராமரிப்பில் மகிழுங்கள்.

தணியாத அழுத்தத்தைத் தவிருங்கள், இடைவிடாத செபத்தில் மகிழுங்கள்.

எதிர்மறைகளைத் தவிருங்கள், உடன்பாடுகளில் மகிழுங்கள்.

முறைப்பாடுகளைத் தவிருங்கள், பாராட்டுக்களில் மகிழுங்கள்.

எதிர்ப்புணர்ச்சியைத் தவிருங்கள், சமரசத்தில் மகிழுங்கள்.

கசப்புணர்ச்சியைத் தவிருங்கள், மன்னிப்பில் மகிழுங்கள்.

நான் என்பதைத் தவிருங்கள், மௌனமாக இதயத்தில் மகிழுங்கள்.

அருட்தந்தை மா.றேஜிஸ் இராசநாயகம்

# மாலியில் உள்நாட்டுக் கலவரம் 100இற்கும் மேற்பட்டோர் பலி



ஆபிரிக்க நாடான மாலியில் வடக்கு பகுதியில் வாழும் தாரக் என்ற பழங்குடி மக்கள் அரசுக்கு எதிராக போராடத் தொடங்கியுள்ளனர்.

இந்தக் கலவரத்தில் 100இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். இதனால் அந்தப் பகுதி மக்கள் உயிர் பிழைக்க அகதிகளாக வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

இதுவரை 1இலட்சத்து 60 ஆயிரம் பேர் அகதிகளாக சென்றுள்ளனர். அவர்களில் 60 ஆயிரம் பேர் மாலியிலேயே வேறு இடங்களுக்கு அகதிகளாக சென்றுள்ளனர்.


ஏனையோர் முரிட்டானியா, நைஜர், புர்கினாபாசோ ஆகிய நாடுகளுக்கு அகதிகளாக சென்றுள்ளனர்.

ஆபிரிக்க நாடான மாலியில் வடக்குப் பகுதியில் தாரக் என்ற பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் வடக்கு பகுதியை பிரித்து தங்களுக்கு தனி நாடாக அறிவிக்க வேண்டும் என்று நீண்ட நாட்களாக அந்நாட்டு அரசிடம் முறையிட்டு வந்தனர்.

இந்நிலையில் அவர்கள், அரசுக்கு எதிராக ஆயுதம் ஏந்தி போராடத் தொடங்கியுள்ளனர்.



# கேமரூனில் 458 யானைகளின் சடலங்கள்



ஆபிரிக்க நாடான கேமரூனில் 458 யானைகளின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு தேசிய வனவிலங்கு சரணாலயத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

யானைகளின் தந்தங்கள் கிழக்காசிய நாடுகளில் குறிப்பாக சீனாவில் அதிகமான விலைக்கு போகும் என்பதால் வேட்டைக்காரர்கள் யானைகளை அழித்து வருகின்றனர்.

ஆபிரிக்கா நாடான கேமரூனில், கடந்த சில வாரங்களில் மட்டும் 458 யானைகளின் சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டதாக அங்குள்ள பௌபா இன்ஜெடா தேசிய வனவிலங்கு சரணாலயத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தானில் குண்டு தாக்குதல்; 13 பேர் உயிரிழப்பு; 36 பேர் காயம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் உள்ள பெஷாவர் நகரில் பேருந்து நிலையத்தில் தீவிரவாதிகள் நடத்திய மனித குண்டு தாக்குதலில் 13 பேர் கொல்லப்பட்டனர். 36 பேர் படுகாயம் அடைந்தனர். இந்த பெஷாவர் நகரில் கோத்வாலி என்ற இடத்தில் முக்கிய பொலிஸ் நிலையம் அமைந்துள்ளது. இங்கு சுமார் 200 பொலிஸார் பணியாற்றி வருகின்றனர்.

இந்தப் பொலிஸ் நிலையத்தில் தீவிரவாதிகள் திடீர் தாக்குதலை நடத்தினர். இந்தத் தாக்குதலில் 3 மனித வெடிகுண்டு தீவிரவாதிகள் ஈடுபட்டனர். சுமார் 40 நிமிடம் இருதரப்பிற்கும் இடையில் துப்பாக்கிச் சண்டை நீடித்தது.

தீவிரவாதிகளின் இந்தத் தாக்குதலில் பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் உள்பட 4 பொலி



ஸார் உயிர் இழந்தனர். மேலும் 8 பேர் படுகாயம் அடைந்தார்கள். இந்தத் தாக்குதலுக்கு அப்துல்லா-அசம் என்ற தீவிரவாத அமைப்பும் பொறுப்பு ஏற்றுள்ளது.

அமெரிக்க இராணுவம் குண்டு வீச்சை நிறுத்தாவிட்டால் இது போன்ற தாக்குதலைத் தொடர்ந்து நடத்துவோம் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்தத் தாக்குதல் சம்பவத்தால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

# நேரடிப் பேச்சுவார்த்தைக்கு தலிபான்களுக்கு அழைப்பு

(இஸ்லாமாபாத்)

ஆப்கான் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வருமாறு தலிபான் உட்பட பல்வேறு அமைப்புகளுக்கு பாகிஸ்தான் அழைப்பு விடுத்துள்ளது.

சமீபத்தில் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் நடந்த ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், ஈரான் நாடுகளின் முத்தரப்புப் பேச்சில் கலந்து கொண்ட ஆப்கான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய் அமைதிப் பேச்சுவார்த்தையில் தலிபான் கலந்து கொள்வதற்கு பாகிஸ்தான் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் எனக் கோரினார்.

இந்நிலையில் பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி வெளியிட்ட அறிக்கையில், ஆப்கான் அரசுடனான அமைதிப் பேச்சுவார்த்தையில் தலிபானும், பிற ஆப்கான் அமைப்புகளும் கலந்து கொள்ள வேண்டும் என்றார்.

தலிபான் தலைவர் முல்லா ஒமர் பாகிஸ்தானில் தான் பதுங்கியுள்ளார் என ஆப்கான் குற்றம்சாட்டி வரும் நிலையில், பாகிஸ்தான் தலிபானுக்கு முதன் முதலாக இந்த அழைப்பை விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஆளில்லா விமானங்களை மீளப்பெறுகிறது பிரான்ஸ்

ஆப்கானிஸ்தானிலிருந்து போர் விமானங்களை பிரான்ஸ் திரும்பப் பெறுகின்றது.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதல் தனது படைகளை திரும்ப பெற்று வருகிற பிரான்ஸ், எதிர்வரும் 2013ஆம் ஆண்டிற்குள் மொத்த இராணுவத்தையும் திரும்பப் பெற்று விடும் என்று பிரான்ஸ் பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது.

மேலும் ஆப்கானிஸ்தானில் செயற்பட்டு வந்த ஃஹர்ஃபாங்ரக ஆளில்லா போர் விமானங்கள் இரண்டை, தனது நாட்டுக்குத் திரும்பக் கொண்டுவரத் தீர்மானித்துள்ளது.

இந்த விமானத்தை இயக்குகின்ற 40 பேரும் தனது நாட்டுக்குத் திரும்பி விடுவார்கள் என்றும் அந்நாட்டு பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதத்தில் ஆப்கானிஸ்தானில் பிரெஞ்சு படைவீரர்கள் 4 பேர் கொலை செய்யப்பட்டதால் பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோசி தனது படைகளைத் திரும்பப் பெற முன்வந்தது குறிப்பிடத்தக்கது.

# பதிவிருக்கப் பெட்டகம்

ஒரு ஊரில் ஒரு முட்டாள் பணக்காரர் இருந்தார். அவர் பெரிய பங்களா ஒன்று கட்டினார். அதைப் பார்வையிட தன் நண்பர்களுக்கு விருந்து ஒன்றை ஏற்பாடு செய்தார். வந்திருந்தவர்கள் அனைவரும பங்களாவின் அழகை வெகுவாக பாராட்டினர். பின்பு பங்களாவின் பின்புறம் சென்று பார்த்தனர். அங்கு மூன்று நீச்சல்குளங்கள்இருந்தன. அனைவரும் ஆச்சரியத்துடன் எதற் காக 3 நீச்சல் குளங்கள் என்று கேட்டனர். அதற்கு அந்த பணக காரர் ஒன்று வெந்நீர் குளியல் வேண்டும் என்பவர்களுக்காக, மற்றொன்று குளிர்ந்த நீர் வேண்டும் என்பவர்களுக்காக என்றார். அனைவரும் வெந்நீர் சரி, தண்ணீர் சரி. காலியாக இருக்கின்றதே அது எதற்கு என்று கேட்டனர். அது நீச்சல் தெரியாதவர் களுக்காக என்றார்.

*** *** ***

ஒருத்தர் ஜப்பான் போய் வந்த பிறகு தன் வீட்டு வரவேற்பறைச் சுவரில் ஜப்பானிய பட எழுத்து எழுதிய ஒரு போஸ்டரை மாட்டினார். வீட்டுக்கு வருகிறவர்களெல்லாம் தவறாமல் இது என்ன? என்று கேட்க, "அதுவா, அது நான் ஜப்பான் போயிருந்த போது எனக்குப் பரிசாகக் கொடுத்தார்கள். அது ஒருவகையான ஹைகூ கவிதை என்று அளந்தார். "அப்படியா உங்களுக்கு ஜப்பானிய மொழி தெரியுமா!" என்று ஆச்சரியப்பட, "தெரியும்" என்று தலையாட்டிக் கொள்வார். "அந்தக் கவிதை என்ன சொல்கிறது" என்று கேட்டால், "அது வந்து–காற்று மரங்களின் ஊடே சங்கீதம் போல் சப்தமிடுவதைப் பற்றிய பாடல்".

இவ்வாறு வருடக்கணக்காக அவர் ரீல் விட்டுக் கொண்டிருக்க, ஒருநாள் உண்மையாகவே ஜப்பானிய மொழி தெரிந்தவர் ஒருவர் வந்தார். நம்ம ஆள் அவரிடமும் வழக்கம் போல கதையளக்க, அவர் அதை முழுவதும் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு, "எனக்கு அப்படித் தெரியவில்லையே" என்றார். "ஏன்" என்று கேட்க, அவர் சொன்னார்: "எனக்கு ஜப்பானிய மொழி தெரியும். அதில் 'திருடர்கள் ஜாக்கிரதை' என்றல்லவா எழுதியிருக்கிறது". நம் மாள் சமாளித்துக்கொண்டு, "அதை அப்படியும் சொல்லலாம். இப்படியும் சொல்லலாம். ஜப்பானிய மொழி விந்தையானது தான்" என்றார்.

*** *** ***

ஒரு தம்பதியினர் தங்களுடைய திருமணம் ஆகி ஐம்பதாம் ஆண்டு விழாவைக் கொண்டாடினர். அவர்கள் இருவரும் மனமொத்து வாழ்வது அந்த ஊரிலேயே அதிகம் பேசப்படும் விஷயம்.

"என்ன அமைதியான அன்பான தம்பதியினர்" என்று ஊரில் உள்ள அனைவரும் பேசினார்கள். அங்கிருந்த ஒரு பத்திரிகை நிருபர் அந்த தம்பதியரிடம் வந்து அவர்கள் இவ்வளவு காலம் நீண்ட திருமண வாழ்க்கைக்கும், சந்தோஷமான வாழ்க்கைக்கும் காரணம் என்னவென்று வினவினார்.

கிழவனார், "ஓ அதுவா, அது எங்களுடைய தேனிலவு காலததிலிருந்து தொடங்குகிறது" என்று சொன்னார்.

"நாங்கள் தேனிலவுக்கு கிராண்ட் கான்யான் சென்றோம். அதன அடி ஆழத்துக்குச் செல்வதற்கு குதிரைகளை ஏற்பாடு செய்து அதன் மீது பயணித்து கீழே இறங்கினோம். சற்று நேரம் சென்ற பின்னர் என் மனைவியின் குதிரை தடுமாறியது. என் மனைவி "இது முதல் தடவை" என்று சொன்னாள். இன்னும் கொஞ்சதூரம் சென்றோம். குதிரை இரண்டாம் முறை தடுமாறியது. என் மனைவி "இது இரண்டாம் தடவை" என்று அமைதி யாகச் சொன்னாள். இன்னும் ஒரு கால் மைல் தூரம் சென்றதும், என் மனைவியின் குதிரை மறுபடி தடுமாறியது. என் மனைவி அமைதியாக குதிரையிலிருந்து இறங்கி தன்னு டைய பையிலிருந்து ரிவோல்வரை எடுத்து குதிரையை அங்கேயே சுட்டுக்கொன்றாள். நான் கோபத்துடன் அவ்வாறு குதிரையை கொன்றிருக்கக்கூடாது என்று சத்தம் போட்டேன். என் மனைவி என்னைப் பார்த்து அமைதியாகச் சொன்னாள். "இது முதல் தடவை" ... அன்றிலிருந்து நாங்கள் சந்தோஷமாக வாழ்ந்து வருகிறோம்"

*** *** ***

ஒரு சர்க்கஸ் சொந்தக்காரர் ஒரு கடைக்குள் நுழைந்தார். அங்கு பலர் கூடி ஒரு மேசை முன்னால் நின்று கொண்டு பார்த் துக்கொண்டிருந்தார்கள். அந்த சின்ன மேசையில்ஒரு சட்டி தலை கீழாகக் கவிழ்க்கப்பட்டிருந்தது. அதன் மீது ஒரு வாத்து நடன மாடிக் கொண்டிருந்தது.

அதைப் பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்ட அந்த சர்க்கஸ் சொந்தக்காரர், அந்த வாத்தை அந்த கடையின் சொந்தக்காரரிடமிருந்து வாங்கிக்கொள்வதாகக் கேட்டார். அதன் பிறகு பேரம பேசி சுமார் 10,000 ரூபாய்க்கு அந்த வாத்தை வாங்கிக் கொண்டு சந்தோஷத்துடன் சர்க்கஸ்காரர் சென்றார்.

மூன்று நாட்களுக்குப் பின்னர், அந்த சர்க்கஸ்காரர் மிகுந்த கோபத்துடன் அந்தக் கடைக்குத் திரும்பி வந்தார். "உன்னுடைய வாத்து பெரும் மோசடி. சர்க்கசுக்கு வந்திருந்த அனை வருக்கும் முன்னால் ஒரு சட்டியை கவிழ்த்துப்போட்டு அந்த வாத்தை நடனமாடச் சொன்னேன். அது ஒரே ஒரு அடி கூட எடுத்து வைக்கவில்லை."

அந்தக் கடை சொந்தக்காரர் யோசித்துக்கொண்டே, "ம்,,,ம்ம்... அந்த சட்டிக்குக் கீழே ஒரு பெரிய மெழுகுவர்த்தியை மறக்காமல் ஏற்றி வைத்தாயா?" என்று கேட்டார்.

*** *** ***

உங்கள் குழந்தை ஆசைகளில் ஏதாவது நிறைவேறியிருக்கிறதா? நிறைவேறியிருக்கிறது. அம்மா என் தலைமுடியைச் சீப்பால் இழுக்கும்போது தலைமயிர் இல்லாமல் இருந்தால் நன்றாக இருக்குமே என்று சின்ன வயதில் நினைத்திருக்கிறேன்.

# குட்டும் தமிழ் கட்சிகளும் குனியும் 'மக்கள்' கூட்டமும்!

சில தமிழ் கட்சிகளைப் பொறுத்த வரை அவர்களது வாழ்நாளில் மாநாடு என்ற ஒரு 'விஷயம்' நடைபெற்றதே கிடையாது. சில தமிழ் கட்சிகள் நடத்திய மாநாடுகள் பற்றியும் பிரமித்துக் கதைப்பதற்கு எதுவும் இல்லை.

செல்வநாயகம், அமிர்தலிங்கம் இருந்த காலங்களில் கூட திருமலை, கல்முனை, உடுவில், ஆவரங்கால், யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் மாநாடு என்ற பெயரில் சில கதம்பக் களியாட்டங்கள் நடந்து வந்திருக்கின்றன. அதற்கு அப்பால் அவற்றை வேறு பெயர் சொல்லி அழைப்பதற்கு அவை லாயக்கற்றவை.

தென்னிலங்கையைப் பொறுத்தவரை, அதிதீவிர முதலாளித்துவக் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி முதல் தீவிர இடதுசாரிக் கட்சிகள் வரை ஒழுங்காக மாநாடுகள் நடத்தாத கட்சிகள் இல்லை எனலாம். இந்த விடயத்தில் உரிமையும் ஜனநாயகமும் பேசும் தமிழ் கட்சிகளை விட, தென்னிலங்கைக் கட்சிகள் பலபடி மேலே உள்ளன.

அதிலும் இடதுசாரிக் கட்சிகளைப் பொறுத்தவரை உலகம் முழுவதுமே அவர்களுக்கு என்று ஒரு பொது நடைமுறை உள்ளது. 'காங்கிரஸ்' எனச் சொல்லப்படும் மாநாடுகள்தான் கட்சியின் சகல விடயங்களையும் தீர்மானிக்கின்றன. மாநாடுகளில் தெரிவு செய்யப்படும் மத்திய குழு சர்வ வல்லமை பொருந்தியது. அதுதான் எல்லா முக்கிய விடயங்களையும் தீர்மானிக்கிறது.

கட்சி ஒரு நாட்டில் அல்லது மாநிலத்தில் அதிகாரத்தில் இருந்தாலும், ஆட்சித் தலைவர் அல்லது நாடாளுமன்றக் குழுத் தலைவரை விட கட்சியின் பொதுச் செயலாளரே மேலானவரும் அதிகாரம் வாய்ந்தவருமாக இருப்பார்.

பெரும்பாலான கம்யூனிஸ்ட் கட்சிகளில், கட்சிப் பொதுச் செயலாளர் அரச அல்லது நாடாளுமன்றப் பதவிகள் எதனையும் ஏற்பதில்லை.

உதாரணமாக இந்தியாவில் உள்ள



இரு கம்யூனிஸ்ட் கட்சிகளையும் எடுதது்க் கொண்டால், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சியின் பொதுச்செயலர் பிரகாஷ் காரத்தோ அல்லது இந்திய கம்யூனிஸ்ட்கட்சியின் பொதுச் செயலர் ஏ.பி.பரதனோ கட்சிக்கு அப்பாற்பட்ட பதவிகள் எதனையும் ஏற்பதில்லை. இந்தக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லது சட்டசபை உறுப்பினர்கள் தமது சம்பளப் பணத்தைக்கூட கட்சியிடமே கொடுதது்விட்டு, கட்சி மாதாமாதம் தரும் படியை (அலவன்ஸ்) மட்டும் தமது செலவுக்குப் பெற்றுக் கொள்கிறார்கள்!

இந்த நடைமுறையை எமது நாடாளுமன்ற உறுப்பினர்களின், அதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நடைமுறையுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியுமா?

எமது நாட்டில் பெரும் பணம் முதலீடு செய்து நாடாளுமன்ற உறுப்பினராக வருவதே, கொழுத்த சம்பளங்களையும், இதர சலுகைகள் வரப்பிரசாதங்களையும் அனுபவிப்பதற்குத்தானே? இங்கே மக்கள் சேவை என்பது தேர்தல் காலங்களில் மக்களை ஏமாற்றி வாக்குப் பெற உபயோகிக்கும் வார்த்தை மட்டும்தான்.

தமிழ்க்கட்சிகளைப் பொறுத்தவரை கட்சித் தலைமைக்கு மதிப்பு கிடையாது. உள்கட்சி ஜனநாயகமும் கிடையாது. நாடாளுமன்றக் குழுத் தலைவரே கட்சிக்காரர்களைவிட உயர்ந்தவர். அவர் வைத்ததே சட்டம். சில வேளைகளில் அவரே ஏககாலத்தில் கட்சித் தலைவராகவும், நாடாளுமன்றக் குழுத் தலைவராகவும் இருப்பார். இரா.சம்பந்தன் இதற்கொரு உதாரணம்.

- பரமு பொன்னம்பலம்

அவர் மட்டுமல்ல தமிழ் கட்சிகளைப் பொறுத்தவரை புலிப் பினாமிக் கட்சிகளுக்கும் சரி, எதிர்ப்புக் கட்சிகளுக்கும் சரி இது பொருந்தும். இதில் கொள்கை வேறுபாட்டைவிட, தமிழனின் தனித்துவம் தான் பொதுவான



குணாம்சமாக இருக்கிறது.

இந்த விடயத்தில் வலதுசாரிக் கட்சியான ஐ.தே.க. வில் கூட, கட்சித் தலைவரைக் கட்டுப்படுத்தும் ஓரளவு அதிகாரம் கட்சிச் செயற்குழுவுக்கு உண்டு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை, அது நான்கு கட்சிகளைக் கொண்டு புலிகளால் உருவாக கப்பட்ட ஒரு பினாமி அமைப்பாகும். புலிகள் இருக்கும்வரை தமிழ்ச் செல்வ னும், அன்ரன் பாலசிங்கமும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை கிளிநொச்சிக்கு அழைத்து பாடங்கள் நடாத்தி, உத்தரவுகள் வழங்கிக் கொண் டிருந்தார்கள். அவர்களுக்குப் பின்னர், பூனையில்லாத வீட்டில் எலிகள் சட்டி பானை உருட்டும் கதையாக கூட்டமைப்பு மாறி விட்டது.

இப்பொழுது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலுள்ள பெரிய கட்சியான தமிழரசுக்கட்சி தன்னைப் பலப்படுத்துவதில் மும்முரமாக இருக்கிறது. கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு 'காலம்' வந்துவிட்டதால், அடுத்த தலைவர் யார் என்ற குடுமிச் சண்டை அங்கு ஆரம்பமாகியுள்ளது. இதில் முன்னணியில் இருப்பவர்கள் மாவை

(12ஆம் பக்கம் பார்க்க)



# பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தமும் பதினைந்தாம் நூற்றாண்டில் காசநோயும்!

- எஸ்.அருளானந்தம் கட்டுரையிலிருந்து


பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தம் அமுலுக்கு வந்து கால் நூற்றாண்டு கடக்கப் போகிறது. அரசியல் யாப்பில் இருக்கும் சட்ட அந்தஸ்துப் பெற்ற திருத்தம் அது. இருந்தும் அதில் வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் தொடர்பான இழுபறி நிலை இன்றுவரை நீடிக்கிறது. இந்த இழுபறி நிலையைப் பார்க்கும்பொழுது பதினைந்தாம் நூற்றாண்டின் இத்தாலிய அரசியல் தத்துவஞானி நிக்கோலோ மாச்சியவெல்லி சொல்லிய ஒரு கருத்துத்தான் ஞாபகத்துக்கு வருகிறது.

பதினைந்தாம் நூற்றாண்டில் காசநோய்க்கு உரிய சிகிச்சைமுறை கண்டறியப்பட்டிருக்கவில்லை. அதாவது இலங்கை இனப் பிரச்சினைக்கு இன்றுவரை அரசியல் தீர்வு காணப்படாதது போல என்று வைத்துக்கொள்ளுங்கள். காசநோயால் ஒருவர் பீடிக்கப் பட்டுள்ளார் என்பதைக் கண்டறியவே டாக்டர்கள் கஷ்டப்பட்ட காலமது. இலங்கையில் முப்பது வருட கால சிவில் யுத்தம் முடிவுக்கு வந்த பின்னரும்கூட, யுத்தத்துக்குக் காரணமான பிரச்சினைக்கு இன்றுவரை அரசியல் தீர்வு காணப்படாதது போல என்றும் வைத்துக் கொள்ளுங்கள்.

காசநோயை அரச விவகாரங்களோடு சம்பந்தப்படுத்திக் கீழ்க்கண்டவாறு ஒப்பிட்டுச் சொன்னார் இத்தாலிய அரசியல் தத்துவஞானி நிக்கோலோ மாச்சியவெல்லி.

'காசநோய் குறித்து டாக்டர்கள் கூறுவதை இன்றைய அரச விவகாரங்களோடு ஒப்பிட முடியும். ஆரம்பத்தில் காச நோய்க்கு இலகுவில் சிகிச்சையளித்து குணப்படுத்த முடியும். ஆனால் காச நோயால் ஒருவர் பீடிக்கப்பட்டுள்ளார் என்பதைக் கண்டு பிடிப்பது தான் கஷ்டம். காசநோய் பீடித்திருப்பதை கண்டுபிடிக்காமல் சிகிச்சை அளிககப்பட்டு, காலவோட்டத்தில் முற்றிய பின்னர் நோயைக் கண்டுபிடிப்பது இலகு. ஆனால் அப்போது சிகிச்சை அளித்துக் குணப்படுத்துவதுதான் கஷ்டம் என்பார்கள் டாக்டர்கள். இப்படித்தான் அரச விவகாரங்களும் இருக்கின்றன' என்றார் மாச்சியவெல்லி.

அதாவது காசநோயைக் கண்டுபிடிப்பது கஷ்டம். காசநோயின் குணம், குறிகளைக் கண்டு பிடிக்காமல் சிகிச்சையளித்துக்கொண்டிருக்கும்போது நோய் முற்றிவிடும். பிறகு முற்றிய காசநோயை சிகிச்சை அளித்துக் குணமாக்குவதுதான் க'டம் என்பதுதான் அர்த்தம்.



இலங்கை இனப் பிரச்சினைத் தீர்வு குறித்தும், பதின்மூன்றாவது அரசியல் திருத்தம் குறித்தும் அரசியல்வாதிகள் ஏட்டிக்குப் போட்டியாகக் கூறும் கருத்துக்களைப் பார்க்கும்போது காசநோய குறித்து அன்று டாக்டர்கள் கூறிய கருத்துத்தான் ஞாபகத்துக்கு வருகிறது.

1987இல் பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தம் கொண்டுவரப்பட்டது. இதன் மூலம் மாகாண சபைகள் ஏற்படுத்தப்பட்டன. ஒற்றையாட்சியின் கீழ் இந்த மாகாண சபைகளுக்குச் சட்டவாக்க மற்றும் செயலாற்று அதிகாரங்களும் வழங்கப்பட்டன. இதன்மூலம் மத்திய அரசுக்கும் மாகாண சபைகளுக்குமிடையிலான விடயங்கள், செயற்பாடுகள் சம்பந்தமாக மூன்று பட்டியல்களும் வெளியிடப்பட்டன.

மத்திய அரசுக்கான பிரத்தியேகப் பட்டியல், மாகாண சபைகளுக்கான பட்டியல், மத்திய மற்றும் மாகாண சபைகள் இரண்டுக்குமான ஒத்தியங்கு பட்டியல்களே அவையாகும். இதனைச் சில அரசியல் நோக்கர்கள் அரைவாசி சமஷ்டி எனவும் குறிப்பிட்டனர்.

பதின்மூன்றாவது திருத்தத்தின் மூலம் அரசியல் யாப்பு ரீதியான அங்கீகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டன. மாகாண சபைகளுக்குக் குறிப்பிட்ட சட்டவாக்க, நிர்வாக, நீதித்துறை அதிகாரங்களும் வழங்கப்பட்டன. மத்திய அரசுக்குரிய பிரத்தியேகப் பட்டியலில நிதி, தேசிய, பாதுகாப்பு, வெளிவிவகாரம் உள்ளிட்ட ஏனைய பல்வேறு தேசியக் கொள்கைகள் தொடர்பான விடயங்கள் உள்ளடக்கப் பட்டுள்ளன. இவை குறித்துச் சட்டங்கள் இயற்றும் அதிகாரம் மாகாண சபைகளுக்குக் கிடையாது. மாகாணப்பட்டியலில் உள்ள விடயங்கள் குறித்துச் சட்டவாக்கம் செய்யும் அதிகாரம் மாகாண சபைகளுக்கு உண்டு"

நாடாளுமன்றச் சட்டவிதிகளின் ஊடாகவே தேசியக் கொள்கைகளை மேற்கொள்ள முடியும். இருந்தபோதிலும் அமைச்சரவைத் தீர்மானங்கள், அமைச்சுச் சுற்றறிக்கைகள் ஊடாக வேண்டுமென்ற தேசியக் கொள்கைகள் வலியுறுததப்பட்ட சம்பவங்கள் பல கடந்த காலங்களில் இடம்பெற்றுள்ளன. மாகாண சபைகளின் செயற்பாடுகள் சம்பந்தமாக ஆராய 1995ஆம் ஆண்டு நியமிககப்பட்ட குணவர்த்தன கமிட்டி இந்தத் துஷ்பிரயோகங்கள் குறித்து சுட்டிக் காட்டியுள்ளது.

'அரசாங்க அமைச்சுக்களைப் பொறுத்தவரை செயற்பாட்டுரீதியில் தேசியக் கொள்கைகளுக்கு அர்த்தம் கற்பிக்கும் போக்குக் காணப்படுகிறது. இதன் மூலம் மாகாண விடயங்களில் தமது நிர்வாக நடவடிக்கைப் பரப்பை கொழும்பு அரசாங்கம் விஸ்தரித்துள்ளது' என்று குணவர்த்தன கமிட்டி சுட்டிக்காட்டியிருந்தது.

பதின்மூன்றாவது திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்பட்டாலும் கூட இலங்கையின் இனப் பிரச்சினைக்கு முற்றுமுழுதான தீர்வு ஏற்பட்டுவிடப் போவதில்லை என்ற விமர்சனங்களும் இருக்கவே செய்கின்றன. இதனால தான் பதின்மூன்று பிளஸ், மேலும் பிளஸ் என்ற வாதங்களும் முன்வைக்கப்படுகின்றன.

1972ஆம் ஆண்டுவரை இருந்த செனட் சபை போன்று, இரண்டாவது சபையொன்று அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையும் முன்வைக்கப் படுகிறது. கடந்த காலங்களில் இருந்த செனட் சபையைப் போல, இரண்டாவது சபையொன்றினை உருவாக்குவதால் பயனேதும் ஏற்பட்டுவிடப் போவதில்லை.

மத்திக்கும் மாகாணங்களுக்கும் இடையில் மட்டுமல்ல, மத்தியிலும் கூட அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். இனசௌஜன்யத்தையும் தேசிய நல்லிணக்கத்தையும் பேணிக் கட்டி வளர்க்கக்கூடிய விதத்தில் மத்தியிலும் கூட அதிகாரப் பகிர்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இரண்டாவது சபையென்பது மத்தியில் உரிய முறையில் இனரீதியான பிரச்சினைகளைக் கையாளக் கூடிய அதிகாரங்கள் கொண்டதாக அமைக்கப்பட வேண்டும்.

எது எவ்வாறிருந்தபோதிலும் யுத்தம் முடிவுக்கு வந்ததுபோல இந்த நாட்டின் அரசியல் பிரச்சினையும் முடிவுக்கு கொண்டுவரப்படவேண்டும். சந்தர்ப்பவாத அரசியலுக்கும் இனத்துவ அரசியலுக்கும் முக்கியத்துவம் கொடுக்காது சகல இன மக்களின் அபிலாசைகளையும் கருத்திலெடுத்து தீர்வு ஒன்றைக் காணவேண்டும். இதற்கு சம்பந்தப்பட்ட அனைவரும் உளப்பூர்வமாக முயன்று முன்வந்து தீர்வை ஏற்படுத்த வேண்டும்.

காசநோய் முற்றியபின் குணப்படுததுவது கஷ்டம். அரசியல் பிரச்சினையும் அவ்வாறே முற்றியபின் தீர்வு காண்பது கஷ்டம்.

# சவேந்திர சில்வா மீதான தடை அரசாங்கம் கடும் கண்டனம்

## ஆசிய நாடுகள் குழுவிடமும் முறையீடு

(கொழும்பு)

அமைதிக்காக்கும் நடவடிக்கை தொடர்பாக ஐ.நா. பொதுச் செயலருக்கு ஆலோசனை வழங்கும் குழுவின் கூட்டத்தில் பங்கேற்க மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்குத் தடைவிதிக்கப்பட்டது குறித்து அரசாங்கம் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இந்த நடவடிக்கை மூர்க்கத்தனமானது என்றும் இதன்பின்னால் உயர்மட்ட தொடர்பு இருப்பதாகவும் அரசாங்கம் கூறியுள்ளது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைதிகாக்கும் நடவடிக்கைக்கான ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டத்தில் சவேந்திர சில்வா பங்கேற்பது பொருத்தமானது அல்ல என்று குழுவின் தலைவரான லூயிஸ் பிரெசெற் அம்மையார் கூறியிருந்தார்.

இதையடுத்து அந்தக் கூட்டத்தில் பங்கேற்ற சவேந்திர சில்வா, எதுவும் பேச அனுமதிக்கப்படவில்லை என்பதுடன், அவருக்கு கூட்டம் தொடர்பான எந்த ஆவணங்களும் வழங்கப்படவில்லை.

கூட்டம் நடைபெறும் அறைக்குள் சவேந்திர சில்வாவை நுழைய விடமாட்டேன் என்றும், அவ்வாறு உள்ளே நுழைந்தால் அவரைத் தான் வெளியேற்றுவேன் என்றும் லூயிஸ் பிரெசெற் அம்மையார் கூறியதாக அரசாங்க தரப்பு செய்திகள் தெரிவித்தன.

உங்களை ஆசிய நாடுகள் குழு நியமித்திருக்கலாம், ஆனால் நீங்கள் இந்தக் கூட்டத்தில் பங்கேறகலாமா இல்லையா என்பதை முடிவு செய்யவேண்டியது நான்தான் என்றும் அவர் குறிப்பிட்டதாகவும் அரசாங்கம் கூறியுள்ளது.

இது குறித்து ஐ.நாவுக்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி பாலித கொஹன்ன வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், இவ்வாறு நடந்துகொள்வதற்கு பிரெசெற் அம்மையாருக்கு எந்த அதிகாரமும் இல்லை என்று கூறியுள்ளார்.

ஐ.நா.வின் முன்னாள் உதவிச் செயலரான இவர், மூர்க்கத்தனமாக நடந்துகொண்டதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் கூறியுள்ளார்.

ஒட்டுமொத்த அனைத்துலக சமூகத்தையும் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு அமைப்பில் சகிப்புத்தன்மையற்றதும், மேலாதிக்க குணம் கொண்டதுமான இந்த நடவடிக்கை அடிப்படையில் ஏற்றுக்கொள்ள முடியாதது.

ஏனைய உறுப்பினர்களிடம் பரப்புரை செய்து சவேந்திர சில்வாவை தனிமைப்படுத்தி வெளியேற்றுவதற்கு பிரெசெற் அம்மையார் முயற்சிக்கிறார்.

இது அவரது தலைமைப் பதவிக்கு ஒவ்வாத செயல்.

ஐ.நாவின் தீர்மானப்படி, அமைதிப்படை நடவடிக்கைகளுக்கான கட்டளையின் அடிப்படையில் ஆசிய நாடுகள் குழுவினால் முறைப்படி தெரிவுசெய்யப்பட்ட சவீந்திர சில்வாவை, இந்தக் குழுவில் இருந்து வெளியேற்றுவதற்கு அதன் தலைவருக்கு எந்த அதிகாரமும் இல்லை.

ஐ.நா.வின் அமைப்பில் இருந்து வெளியேற்றுவதற்கு எந்தவொரு நீதிமன்றத்தின் முன்னாலும், நம்பகமான அதிகார அமைப்பினால் சவேந்திர சில்வா குற்றம் சாட்டப்படவில்லை.

நீதி விசாரணையின்றி அவரை நீக்க முற்படுவது நீதியற்றது, ஐ.நா.வின் அடிப்படைக் கொள்கைகளுக்கு முரணானது. என்றும் அரசாங்கம் கூறியுள்ளது.

அதேவேளை, பிரெசெற் அம்மையாரின் இந்த நடவடிக்கை குறித்து இலங்கை அரசாங்கம் ஆசிய நாடுகளின் குழுவிடம் முறையிட்டுள்ளது.

# பருத்தித்துறை கடற்கரை வீதி திறக்க நகரசபையில் தீர்மானம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கடற்கரை வீதியைத் திறந்து போக்குவரத்திற்கு அனுமதிப்பதுடன் துறைமுகத்திற்கு அண்டிய தபால் நிலையத்தை மீண்டும் இயங்க வைக்குமாறும் அதனோடு ஒட்டிய பகுதியைச் சேர்ந்த 20 இற்கும் மேற்பட்ட குடியிருப்பாளர்களை மீண்டும் அவர்களை யுத்தத்தின் பின் சொந்த இடங்களில் குடியமர்த்த அனுமதிக்குமாறு கோரியும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரசபை மாதாந்த கூட்டத்தொடரில் சபை உறுப்பினர்களால் நிறைவேற்றப்பட்டது. பருத்தித்துறை நகரசபை தலைவர் சபா.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது. கூட்டத்தில் ஏனைய தீர்மானம் வருமாறு,

பருத்தித்துறை சிவன் கோவிலை அண்டிய மதுபானசாலையை உடனடியாக அங்கிருந்து அகற்றி ஆலய புனிதத்தை பேணும் பொருட்டு மதுபான சாலையை வேறு இடத்திற்கு மாற்றுவதற்காகக் கோரும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. இக்கூட்டத்திற்கு ஆளும் கூட்டமைப்பு உறுபபினர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள், செயலாளர் என பலரும் கலந்து கொண்டனர். (116)

# பயணிகளைக் கவனத்தில் கொள்ளாத தனியார் பேருந்து சேவை

(புதுக்குடியிருப்பு)

ஐந்து நேர் இருக்கைகள் கொண்ட பேருந்துகளில் பொது மக்கள் பயணம் செய்வது பலத்த அசௌகரியத்தை ஏற்படுத்துவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

அரச பேருந்துகளில் நான்கு நேர் இருக்கைகள் மட்டும் இருப்பதால், நின்ற நிலையில் பயணம செய்வது இலகுவானதாகவும், ஐந்து நேர் இருக்கைகள் கொண்ட தனியார் பேருந்துகள் சிலவற்றில பயணம் செய்வது பலத்த சிரமங்களை உண்டுபண்ணுவதாகவும் பிரச்சினைகள் சிலவற்றை ஏற்படுத்துவதாகவும் அப்பேருந்துகளில பயணம செய்யும் பொதுமக்கள பலரினாலும் சுட்டிக்காட்டப்படுகிறது.

குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியா போன்ற தூர இடங்களுக்குச் செல்லும் தனியாரின் ஐந்து நேர் இருக்கைகள் கொண்ட பேருந்துகளில் கைக குழந்தைகளோடும் மற்றும் பாரிய பொதிகளோடும் பயணிப்பவர்கள், பேருந்தினுள் பயணிகள் நிறைந்திருக்கும் சமயத்தில், தங்களது குறிப்பிட்ட இடங்களில இறக்கமுடியாது பெரும் அவதிக்குள்ளாவதாகவும் தெரிவிக்கப படுகிறது.

எனவே இதனோடு சம்பந்தப்பட்டவர்கள் நீண்ட தூரத்திற்குப் பயணம் செய்யும் பயணிகளின் சௌகரியத்தைக் கவனத்தில் கொண்டு பேருந்தினுள் நானகு நேர் இருக்கைகள் கொண்டதாக மாற்றி அமைக்கும்படி பொதுமக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.(138)

## ஜெனிவா தீர்மானம்...

ஆராய்கிறது. எனவே, இது தற்போதைய அரசாங்கத்தின் மீதான நடவடிக்கையாகவே அமைகிறது என்று லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிட்டார்.

மனிதவுரிமைகள் பேரவையில் பிரேரணையை தாக்கல் செய்பவர்கள் பல கோரிக்கைகளை முன்வைதுள்ளனர். இலங்கையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொல்லப்படுவதை தவிர்க்கவேண்டும், ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவதையும், படுகொலை செய்யற்படுவதையும் நிறுத்தவேண்டும், ஊடக சுதந்திரம் பாதுகாக்கவேண்டும்.

அத்துடன், சுயாதீன ஆணைக்குழு உருவாக்கப்பட வேண்டும். இது தவிர, வெள்ளைவான் சம்பிரதாயத்தை நிறுத்தவேண்டும் என்றும் பல வலியுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன என்று அவர் குறிப்பிட்டார்.

## தகுதி அடிப்படையிலான...

வழங்கப்பட்டால் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தி, மனிதவுரிமை நிலைமைகளை மேம்படுத்த முடியும்.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை கடந்த டிசம்பர் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், இலங்கைக்கு எதிரான தீர்மானம் குறித்து ஜனவரி மாதம் 25 ஆம் திகதி எனக்கு அறிவிக்கப்பட்டது.

போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கவும், கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் அவர்களுக்கு சலுகைகள் வழங்குவதற்குமான பொறிமுறை ஒன்று ஏற்படுத்தப்படும். இலங்கையில் இடம்பெ[illegible] போரினால் இடம்பெயர்ந்த 300,000 பேரில் தற்போது 5,000 பேர் மாத்திரமே மீளக் குடியமர்த்தப்பட வேண்டியுள்ளது.

அதேவேளை, குற்றவியல் சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய சம்பவங்களை சட்டமா அதிபர் இனங்காண்பார். காணிகளின் சட்டரீதியான உரிமையாளர்கள் அக்காணிகளை பயன்படுத்த விடுதலைப் புலிகள் மறுத்திருந்தனர், போரின் பின்னர் காணிகள் தொடர்பாக [illegible]கலான உரிமை கோரல்கள் உள்ளது. காணியற்ற மக்களின் ப[illegible]சசினைகளைத் தீர்க்கும்போது இவ்விடயங்களுக்குத் தீர்வு காணப்படும் என பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

## வெளிநாட்டு தலையீட்டிற்கு...

நாடு தழுவிய ரீதியில் நாளைமுதல் இடம்பெறவுள்ள ஆர்ப்பாட்டங்கள், வெளிநாடுகளின் தேவையற்ற தலையீடுகளிலிருந்து நாட்டைக் காப்பாற்றும் மக்களின் கவசம் என்ற தொனிப்பொருளில் இடம்பெறவுள்ளது.

ஐ.நா. மனித உரிமை மாநாட்டில் அரசுக்கெதிராக உள்ளூர் மற்றும் வெளிநாட்டுச் சக்திகளால் கொண்டுவரப்படும் சவால்களை தோற்கடிப்பதை இலக்காக்கொண்டு இந்த ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படவுள்ளன.

நாளைமுதல் மார்ச் இரண்டாம் திகதிவரை இந்த ஆர்ப் பாட்டங்கள் நடைபெறும். இதன்படி நாளை மாலை மூன்று மணிக்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலும், நாளை மறுதினம் கொழும்பு மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகிலும் எதிர்வரும் முதலாம் திகதி மின்சார சபை தலைமையத்திற்கும் முண்பாகவும் இரண்டாம் திகதி மருதானை தொழில்நுட்பக் கல்லூரிச் சந்தியிலும் இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெறவுள்ளது.

அத்துடன், யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை உட்பட 150 இடங்களில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சரணடைய வந்தோரை...

கொண்டனர், அவர்களின் பெயர்கள் ஞாபகமில்லை, ஒருவர் சமா தான செயலகத்தைச் சேர்ந்தவர், அவர்கள் சரணடைய விரும்பினர். பாதுகாப்பான வழியில் சரணடையவே விரும்புவதாகத் தெரிவித்தனர். அதனை நான் ஏற்றுக்கொண்டேன். இந்த விடயம் குறித்து வெளிவிவகார அமைச்சரிடம் பேசினேன், ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரிடமும் பேசினேன். ஏனைய கைதிகளைப் போன்றே அவர்களும் நடத்தப்படுவார்கள் என அவர்கள் உறுதியளித்தனர். அதன் பின்னர் என்ன நேர்ந்தது எனத் தெரியாது. உத்தரவாதம் அளிக்கப்பட்ட நிலையில் சரணடைய விரும்பியோர் எவ்வாறு உயிரிழந்தனர் என இன்னர் சிற்றி பிரஸ், நம்பியாரிடம் கேள்வி எழுப்பியது. அதற்கு, சில வேளைகளில் சக போராளிகள் சரணடைய விரும்பியோர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியிருக்கலாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எந்தவொரு ஊகத்தையும் வெளியிடத்தயாரில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். இவ்வாறான கருத்தையே பசில் ராஜபக்ஷவும் கொண்டுள்ளார் என நம்பியார்குறிப்பிட்டுள்ளார்.

வெள்ளைக்கொடிச் சம்பவம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கொஹணவுடன் பேசியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நல்லூர் பிரதேச...

எல்லாவற்றுக்கும் தான் ஒரு கைப் பொம்மையாக இயங்க வேண்டும் என்பதைத்தன்னால் அனுமதிக்க முடியாது என தவிசாளர் குறிப்பிட்டார்.

இரண்டு பேரும் இணைந்து சபையின் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என பல உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டனர். (137)

## இலங்கை குறித்த...

தெரிவித்துள்ளார். இதேவேளை ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரவுள்ள தீர்மானத்திற்கு எதிரான பிரசாரத்தில் ஈடுபட்டுள்ள இலங்கைத் தூதுக்குழுவினர், பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளுடன் வெற்றிகரமாக பல உயர்மட்ட சந்திப்புகளை நடத்தியுள்ளதாக அத் தூதுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

## இலங்கைக்கு எதிரான...

இந்நிலையில், ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா மேற்கொள்ளவுள்ள நகர்வுகள் இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என இச்சந்திப்பில் கலந்துகொண்ட இலங்கையின் மற்றொரு அமைச்சரான நிமால் சிறிபால டி சில்வா நவநீதம்பிள்ளையிடம் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ஒசாமா பின்லாடன் கொல்லப்பட்டமை உள்ளிட்ட அமெரிக்காவினால் மேற்கொள்ளப்பட்ட நீதிக்குப் புறம்பான படுகொலைகள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழு எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என நவநீதம்பிள்ளையிடம் நிமால் சிறிபால டி சில்வா கோபத்துடன் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்நிலையில், ஒசாமா பின்லாடன் கொல்லப்பட்டபோது, அதனைத தான் கண்டித்ததாக நவநீதம்பிள்ளை பதிலளித்தபோது, அரசாங்கத்தின் பிரதிநிகள் தரப்பினர் மேலும் எரிச்சலை வெளிப்படுத்தியதாக தெரியவருகின்றது.

அத்துடன், இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்க்ள் குறித்து பொறுப்புக் கூறுதல் தொடர்பில் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையில் எவ்வித பரிந்துரைகளும் முன்வைக்கப்படாமை குறித்து அரசாங்கத்தின் பிரதிநிதிகளிடம் இச்சந்திப்பின்போது நவநீதம்பிள்ளை கேள்வி எழுப்பியுள்ளார்.

## இலங்கைப் பிரதிநிதிகள்...

அருண் தம்பிமுத்து உள்ளிட்ட குழுவினரே பயணமானார்கள். இக குழுவினரே அமைச்சர் மகிந்த சமரசிங்கவுடன் இணைந்து ஐக்கிய நாடுகள் மனித உரிமை கூட்டத்தொடரில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதேவேளை, ஜெனிவா புறப்படுவதற்கு முன்னர் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

ஜெனிவா கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் காழ்ப்புணர்ச்சி கொண்டதாக உள்ளது. சமாதானத்ததை விரும்பாமல் தமது நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்க விரும்பும் மேற்கத்திய நாடுகளின் சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களால் ஒருபோதும் ஜனநாயக விழுமியங்களை கொண்ட இலங்கை தேசம் அஞ்சப் போவதில்லை என்றார்.

# ரோம் ஒப்பந்தத்தில் கையெழுத்திடாது அரசைப் பாதுகாத்துள்ளாராம் ரணில்



(கொழும்பு)

தான் பிரதமராக இருந்த காலத்தில் ரோம் ஒப்பந்தத்தில் கையொழுத்திடவில்லையெனவும், எனவே அரசாங்கம் கூறுவதைப் போல இலங்கையை சர்வதேச நீதிமன்றில் நிறுத்தி தண்டனை வழங்க முடியாது எனவும், இதன் மூலம் தற்போதைய அரசாங்கத்தை தான் பாதுகாத்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கண்டி, கட்டுகஸ்தோட்டை நகரில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

இந்த அரசாங்கம் மக்களை சித்திரவதை செய்கின்றது. இன்று மக்களுக்கு வாழ முடியாதளவு எரிபொருளின் விலையை அரசாங்கம் அதிகரித்துள்ளது. இதனால் பஸ் கட்டணம், மின் கட்டணம் பாணின் விலை உள்ளிட்ட பல பொருட்களின் விலைகளை அதிகரித்து மக்களை சித்திரவதை செய்கின்றது.

ஜெனிவாவில் எதிர்வரும் 27 ஆம் திகதி இடம்பெறவுள்ள இலங்கைக்கு எதிரான மனித உரிமைகள் பிரேரணைக்கு எதிராக மக்களை வீதிக்கு இறங்குமாறு அரசாங்கம் கூறுகின்றது. நாங்கள் வீதிக்கு இறங்குவதால் எவ்வித பயனும் இல்லை.

நாங்கள் அரசாங்கத்திற்கு கூறுவது என்னவென்றால் உடன் அரச ஊழியர்களது வேதனத்தை அதிகரித்து மக்களுக்கு உதவிகளை வழங்க வேண்டும் என்றே. நாளை அரசாங்கம் அதனை செய்யுமானால் நாங்களும் அரசாங்கத்துடன் சேர்ந்து வீதிகளுக்கு இறங்குவோம்.

இல்லாவிட்டால் மக்களுக்கு உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக நாங்கள் வீதிக்கு இறங்குவோம் என்றார்.

# கச்சதீவு இலங்கைக்கு சொந்தம் நிரூபிப்பதற்கு ஆவணங்கள் தயார்

(கொழும்பு)

கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானது என்பதனை நிரூபிக்க எழுத்துமூல ஆவணங்கள் காணப்படுவதாக வடக்கு கடற்படைக் கட்டளைத் தளபதி ரவி விஜேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

கச்சதீவை மீளவும் இந்தியா பெற்றுக் கொள்ள வேண்டும் என தமிழக அரசியல்வாதிகள் விடுத்து வரும் கோரிக்கைக்கே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

குறுகிய அரசியல் இலாபங்களுக்காக தமிழக அரசியல்வாதிகள் இவ்வாறான கோரிக்கைகளை விடுத்து வருகின்றனர். ஆனால் கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானது என்பதனை நிரூபிப்பதற்கு தேவையான எழுத்துமூலமான ஆதாரங்கள் காணப்படுகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கச்சதீவு தேவாலயம் யாழ்ப்பாண பேராயரினால் நிர்வாகம் செய்யப்பட்டு வருகின்றமை மூலம் இது மேலும் உறுதியாகின்றது. கச்சதீவு இலங்கை கடற்பரப்பில் அமைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கைதிகள் – காவலர்கள் வவுனியா சிறையில் முறுகல்



(வவுனியா)

வவுனியா சிறைச்சாலையிலுள்ள சிறை கைதிகளுக்கும் காவலர்களுக்கும் இடையில் நேற்று முறுகல் நிலையொன்று ஏற்பட்டது.

சிறைச்சாலையிலுள்ள கைதியொருவரை பார்வையிட நேற்று முன்தினம் வந்திருந்த பார்வையாளரொருவரை சிறைக் காவலர் தாக்கியதாகவும், இதனையடுத்து கைதிகள் சிலர் சம்பந்தப்பட்ட காவலரை தாக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் நேற்றுக் காலை சிறைக்கூடங்களினுள் சிறை காவலர்கள் எவரும் பிரவேசிக்காததால் கைதிகளை கூண்டிலிருந்து வெளியில் செல்வதற்கு திறந்துவிடப்படவில்லை.

இதனால் ஆத்திரமுற்ற கைதிகள் கூச்சலிட்டதுடன் சிறைக் கூடங்களினை சேதப்படுத்தினர். இதனால் ஏற்பட்ட பதற்ற நிலையால் சிறை வளாகத்தினை சுற்றி பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

இந்நிலையில் சிறைச்சாலை நலன்புரி சங்கத்தினை சேர்ந்த சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் சம்பவ இடத்திற்கு சென்று இரு தரப்பினருடனும் கலந்துரையாடி சமரசம் ஏற்படுத்தினார். இதனையடுத்து கைதிகள் திறந்து விடப்பட்டனர்.

# உயர்வடைந்த ஆயுட்காலம்

(கொழும்பு)

இலங்கையில் ஆண்கள் மற்றும் பெண்களின் சராசரி ஆயுட்காலம் உயர்வடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, 74 ஆகக் காணப்பட்ட பெண்களின் சராசரி ஆயுட்காலம் 80 ஆக உயர்வடைந்துள்ளது.

71 ஆகக் காணப்பட்ட ஆண்களின் சராசரி ஆயுட்காலம் 76 ஆக உயர்வடைந்துள்ளது. நாட்டில் ஏற்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களினால் இவ்வாறு ஆயுட்காலம் உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் நாற்பது ஆண்டுகளில் இலங்கையர்களின் சராசரி ஆயுட்காலம் நூறு ஆண்டுகள் வரையில் அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுவ்தாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

எவ்வாறெனினும், ஆயுட்காலம் உயர்வடைவதனால் இலங்கையில் முதியோர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புகலிடத் தமிழரின் நாடு கடத்தலை பிரிட்டன் கைவிட வேண்டும்

HUMAN RIGHTS WATCH

இலங்கைத் தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்தும் நடவடிக்கைகளை பிரித்தானியா கைவிட வேண்டுமென மனித உரிமை கண்காணிப்பகம் கோரியுள்ளது.

பிரித்தானியா, இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் குறித்து மதிப்பீடு செய்ய வேண்டுமெனவும் அது சுட்டிக்காட்டியுள்ளது.

பிரித்தானியாவிருந்து நாடு கடத்தப்பட்ட தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்கள் சிலர் சட்ட விரோதமான முறையில் கைது செய்யப்பட்டு துன்புறுத்தப்பட்டதாக தமது அமைப்பு நடத்திய ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது என மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி நூறு புகலிடக் கோரிக்கையாளர்களை பிரித்தானியா தனி விமானமொன்றில் இலங்கைக்கு நாடு கடத்த உள்ள நிலையில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பில் பிரித்தானியா சர்வதேச சட்டங்களைப் பின்பற்ற வேண்டுமென மனித உரிமை கண்காணிப்பாகத்தின் ஆசிய பிராந்தியபணிப்பாளர் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட எட்டு இலங்கையர்கள் துன்புறுத்தல்களுக்கு இலக்கான சம்பவங்கள் பற்றி மனித உரிமை கண்காணிப்பகம் தகவல்களை வெளியிட்டுள்ளது.

இதேவேளை, இலங்கைக்குத் திருப்பியனுப்பப்பட்டவர்கள் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுவதாகக் கூறப்படுவது பற்றி விசாரித்துள்ளதாகவும் அந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரங்கள் இல்லை என்றும் பிரிட்டனின் வெளியுறவு அமைச்சு விவகாரங்களுக்குப் பொறுப்பான நாடாளுமன்ற உறுப்பினர் அலஸ்ட்யார் பர்ட் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# உலகில் பலம்வாய்ந்த தலைவர்களை அப்புறப்படுத்த அமெரிக்கா சூழ்ச்சி

## அமைச்சர் சம்பிக்க கொதிப்பு



(கொழும்பு)

உலகின் பல்வேறு நாடுகளில் பலம் வாய்ந்த தலைவர்களாக விளங்குபவர்களை அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்தும் சூழ்ச்சிகரமான நடவடிக்கைகளில் அமெரிக்கா போன்ற நாடுகள் ஈடுபட்டுவருவது அனைவரும் அறிந்த உண்மை என மின் சக்தி, எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

மனித உரிமை, ஜனநாயகம் என்ற பேரில் சர்வாதிகாரத்தை திணிக்கவே அமெரிக்கா முயற்சிப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அமெரிக்காவானது லிபியா, சிரியா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், ஈராக், துனீஷியா, எகிப்து மற்றும் மாலைதீவு போன்ற நாடுகளில் ஏற்படுத்தியுள்ள நிலையை இலங்கையிலும் ஏற்படுத்த முயற்சிப்பதாகவும் அவர் குற்றஞ் சாட்டினார். இலங்கைக்கோ, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கோ இது போன்ற நிலைமையை உருவாக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது. கடந்த காலங்களில் நாம் சட்டத்தை சிறந்த முறையில் நிலை நாட்டியுள்ளோம். அதனை எதிர்காலத்திலும் அவ்வாறே செய்வோம்.

பொருளாதார, அரசியல், சமூக பிரச்சினைகளை ஏற்படுத்தவே இவர்கள் முயற்சிக்கின்றனர். வெளிநாடுகளின் சவால்களுக்கு முகம் கொடுக்க நாம் தயாராக உள்ளதுடன் எமது மக்கள் இதற்காக பூரணமாக ஒத்துழைக்கத் தயாராக உள்ளனர் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

எனவே, கட்சி பேதங்களுக்கு அப்பால் சமாதானத்தையும், சுதந்திரத்தையும் அனுபவிக்கும் சகல தரப்பினரும் இதற்கு பூரணமாக ஒத்துழைக்க வேண்டும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# நியூஸிலாந்து தீ விபத்தில் இலங்கையர் கருகிப் பலி

நியூஸிலாந்தின் ஒக்ஸ்போட் கென்டபெரியில் இலங்கையர் ஒருவர், வீட்டில் ஏற்பட்ட தீ காரணமாக மரணமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சமீர சந்திர சேன (வயது - 28)என்ற நபரே இச் சம்பவத்தின் போது உயிரிழந்துள்ளார். சடலம் முழுமையாக தீயினால் எரிந்த நிலையில் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் இரண்டு பேரைக் கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தீயினால் பாதிக்கப்படுவதற்கு முன்னர், சந்திரசேனவின் உடலில் அடி காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் இது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# பட்டதாரிகள் குறித்து அரசு விசேட கவனம்

(கொழும்பு)

நாட்டின் சகல மாவட்டங்களிலும் உள்ள பட்டதாரிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது. அரசின் விசேட அபிவிருத்தித் திட்டங்களின் மூலமாக நாட்டிலுள்ள பட்டதாரிகள் தொடர்பிலும் தகவல்கள் பெற திட்டமிடப்பட்டுள்ளதாக தகவற்றுறை அமைச்சர் லஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

விசேடமாக கிராம அபிவிருத்தி திட்டம், ந்கர அபிவிருத்தித் திட்டங்களில் பட்டதாரிகளது வேலை குறித்தும் கவனம் செலுத்தப்படும் என அவர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 பெப்ரவரி 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.